# நாயன்மார்கட்டு
# ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தானம் கும்பாபிடேக மலர்

University of Jaffna
235.4
YAL
250268(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு

# அருள்மிகு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தானம்

# கும்பாபிடேக மலர்



மலராசிரியர்:

வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ.

(சொக்கன்)

1993-07-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ். நாயன்மார்கட்டு
அருள்மிகு வெயிலுகந்த விநாயகர்
தேவஸ்தான

# கும்பாபிடேக மலர்

235.4 YAL. AR
UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA
UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
250268
250268
University of Jaffna
250268
Library

வெளியீடு:
அருள்மிகு வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தானம்
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
1993–7–14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

## காப்பாளர்கள்

சிவஸ்ரீ. சோ. பாலசுந்தரக் குருக்கள்

சிவஸ்ரீ பா. விநாயகமூர்த்தி ஐயா

திரு. ச. சோதிநாதன் ஐயா

## தலைவர்

திரு. இ. சரவணமுத்து

## மலராசிரியர்

வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ. (சொக்கன்)

## உறுப்பினர்

திரு. இ. அரசகுலசூரியன்

திரு. நி. தயாநந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன

இரண்டாவது குருமகாசந்நிதானமும் ஆதீன முதல்வருமான

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# அருளாசியுரை

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே,

நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகப் பெருமான் ஆலய மஹாகும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். புராதனமான, வரலாற்றுப் புகழ்மிக்க இத்தேவாலயம் அமைந்திருக்குமிடம் 'நாயன்மார்கட்டு'. அடுத்து. இப் பெருமானுக்கு 'வெயிலுகந்த' என்ற சொல் அடை. இச்சொற்களே திருவருட் பெருமை துலங்கச் சான்று பகர்வன. பக்தசிரோமணியான ஒரு மூதாட்டிக்கு அருள் பாலித்த உண்மை வரலாறு வெயிலுகந்த என்ற சொல்லுக்குப் பின்னணியிலுள்ளது. கும்பாபிஷேகம் காண்பது கோடிபுண்ணியம். சாதாரண விழாக்கள் போலல்லாது பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தப் பெறுவது மூலமூர்த்தியின் அருட்பிரவாகத்தை மீண்டும் பெருகச் செய்வதே இதன் உட்கருத்து. மேலும் பிரணவ சொரூபியும் தனக்குமேலான நாயகனில்லாதவருமான விநாயகப் பெருமானுக்கு எடுக்கும் கைங்கரியங்களெல்லாம் அதியுயர் ஸ்தானம் வகிப்பன. சடங்குகள் கிரியைகளிலெல்லாம் அவருக்கே முதலிடம். மிக எளிய முறையில் பூஜிக்கப் படுபவருமவரே. மற்றும் மூர்த்திகள்போல் அல்லாது எமது பிழைகளை எல்லாம் பொறுத்தருளும் கருணாமூர்த்தியான ஞானக்களஞ்சியம். திரிகரண சுத்தியோடு அவரின் திருவடிகளைப் பற்றிக் கொண்டால் வேண்டுவனவெல்லாம் ஈந்தருளுவார். இப்பெருவிழா சிறப்புற நிறைவுற எல்லா வகையாலும் தொண்டுகள் புரிந்த. நிதி உதவிபுரிந்த அன்பர்களைப் பாராட்டுகிறோம். எல்லோருக்கும் விநாயகப் பெருமான் திருவருள்வேண்டி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

— ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நாயன்மார்கட்டு, அருள்மிகு வெயிலுகந்த விநாயகர் ஆலய
ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான
சிவஸ்ரீ சோ. பாலசுந்தரக் குருக்கள் அவர்கள்

# அருள் ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகாட் பாசக்
கள்ளவினை பசும் போதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைத்து வருவினைகள் தீர்ப்பாம்

திருச்சிற்றம்பலம்

ஓங்கார ஸ்வரூபியாக விளங்கும் விநாயகப் பெருமான் நாம் செய்கின்ற நல்வினை தீவினைக்கேற்ப இன்ப துன்பத்தைக் கொடுத்து நமக்கும் இறைவனுக்கும் அன்பினால் தொடர்பு ஏற்படுத்தி தமது பாசத்தினால் தீவினையை அகற்றி இந் நாட்டு மக்கள் அனைவருக்கும் தமது கருணை மழையைப் பொழிந்து புராதன காலம் தொட்டு நாயன்மார்கட்டுப் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளி "வெயிலுகந்த விநாயகன்" என்ற திருநாமம் கொண்டு அருள் பாலித்து வருகிறார்.

பெருமானது ஆலயம் வரலாற்றுப் புகழ் மிக்கது. காலவெள்ளத்தினால் ஏற்படும் பழுதுகளைச் சீர் செய்யும் பொருட்டு ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்று எண்ணி 23 6 89 இல் பாலஸ்தாபனம் செய்து தொடர்ந்து பெருமானின் திருவருளினாலும் பொதுமக்களின் பெரும் பொருள் உதவியினாலும் பண உதவியினாலும் திருப்பணி வேலைகள் ஓரளவிற்கு நிறைவு பெற்று நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் வைகாசித் திங்கள் 20 ஆம் நாள் (2-6-93) புதன் கிழமை ஸ்வாதி நட்சத்திரத்தில் காலை 6.00 – 6.40 ற்குள் வந்த இடபலக்ன சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்குடமுழுக்கைக் கண்குளிரக் கண்ட கிராமமக்கள் பெறுதற்கரிய பேற்றினையுடையவர்கள் ஆவார்கள். இந்தக் குடநன்னீராட்டு விழாவின் போது இச்சிறப்பு மலரை வெளியிடுவது குறித்து அடியேன் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் எல்லாமே எதிர்கால மக்களுக்குச் சமய அறிவையும் வரலாற்றுத் தொன்மையையும் வெளிப்படுத்தும் என உறுதியாக நம்புகின்றேன்.

திருக்கோயிலின் புனருத்தாரண கைங்கரியத்திலும் சமய மணமும் புராதன மணமும் கமழும் மலரை வெளியிடுவதிலும் முழுமுயற்சியுடன் ஈடுபடும் வெளியீட்டாளர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் வெயிலுகந்த விநாயகனின் திருவருள் கிடைக்க வேண்டுமென உள்ளன்போடு இறைவனை வணங்கி அருள் ஆசி கூறி அமைகின்றேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து
சுபம்

சோ. பாலசுந்தரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான

தலைவர், துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி,

## தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

# வாழ்த்துரை

நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகப் பெருமானுக்குக் குடமுழுக்கு விழா நடைபெறுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நல்லூர் இராசதானியாக விளங்கிய தமிழ் மன்னன் சிங்கை ஆரியன் காலத்தில் கீழ்த் திசைக் காவல் மூர்த்தியாக விளங்கிய பெருமான் இவர் என்பதை அறியும் போது உள்ளம் உவகை கொள்கிறது. எமது மண்ணுக்கு நாலு திசைகளிலும் காவல் புரிந்து காப்பாற்றிய அருள் மூர்த்திகளை வழிபாடு செய்து குடமுழுக்கு எடுப்பது மிகவும் இன்றியமையாத கடமையாகும். இந்தவகையில் நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகனுக்கு நடைபெறவிருக்கும் குடமுழுக்கு விழா மிக மிக வரவேற்கத்தக்க ஒரு பக்திப் பெருவிழாவாகும். "எப்போதகத்தும் நினைவார்க்கு இடரில்லை கைப்போதகத்தின் கழல்" என்று பாடிப்பாடிப் போற்றுவார்கள் விநாயக பக்தர்கள். பிள்ளையாருக்குத் தோப்புக் கரணம் போட்டால் வேறு எவருக்கும் இவ்வுலகில் தோப்புக் கரணம் போட வேண்டிய தேவை ஏற்படாது. மறக்கருணை. அறக்கருணை ஆகிய இரண்டையும் "விக்கினேஸ்வரன்" என்ற நாமம் உணர்த்துகிறது. நினையாதவர்களுக்கு விக்கினங்களை ஏற்படுத்துதலும் நினைப்பவர்களுக்கு விக்கினங்களைத் தவிர்த்து அருள்புரிவதும் அவனுடைய அருட் செயலாகும்

நாயன்மார்க்கட்டுச் சைவ நன் மக்களின் இப்பெரு முயற்சி பாராட்டுக்குரியது. இறையன்பும் வழிபாடும் பெருகி வளரும் போதுதான் நாடும் சமூகமும் நலம் பெற்று எழுச்சியடையும். இவற்றுக்கெல்லாம் வழிகாட்டி நிற்பன ஆலயங்களே என்பது முற்றிலும் உண்மை.

எனவே திருக்கோயிற் பணிகளை மேற்கொள்பவர்கள் அனைவரும் இம்மண்ணுக்கு உபகாரிகளே என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்டு வாழ்த்துவதும் அவர்களை வணங்குவதும் எமது கடனாகும்.

— தங்கம்மா அப்பாக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகச் செயலாளர் வாழ்த்துரை

எல்லையில் புகழ் நீள நின்று நிலவும் நல்லையம்பதியின் கிழக்குப் புறத்து எல்லையிலே, நாயன்மார்கட்டிலே தொல்லை வினையெலாம் போக்கும் கருணைக் கடலாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார் வெயிலுகந்த விநாயகமூர்த்தி.

வழிபடுமவரிடரையெல்லாம் போக்கிடும் இந்தப் பெருமானாரது திருக்கோயில் பாலஸ்தாபனமாகிச் சில ஆண்டுகள் கழிந்த நிலையில் பாரிய திருப்பணிகள் நிறைவாகி மகாகும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்னும் பெருஞ் சாந்தி சால்புற நிகழத் திருவருள் கைகூடி உள்ளமை சைவ மக்கள் செய்த தவமேயாகும். சைவப் பெருமக்கள் எம்பெருமானது திருப்பணிகளுக்கு வாரிவாரி வழங்கிப் பேருதவி செய்தமையால் இன்று மகாகும்பாபிஷேகம் மாண்புடன் பொலிகின்றது.

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தனாகிய சிங்கையாரியனது வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாக விளங்கி இன்றுவரை நின்று நிலவும் வரலாற்றுப் பெருமை இத் திருக்கோயிலுக்கு உண்டு. அப்போது புராண படனங்களும் பேருரைகளும் மாகேசுர பூசை போன்ற திவ்வியமான பணிகளெல்லாம் இங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றுவந்தன.

பல ஆண்டு காலமாகச் சைவப்பெருமக்கள் பாரம்பரியமாக வழிபாடு நடத்தி வந்த திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், கதிர்காமம், நகுலேஸ்வரம், நயினையம்பதி முதலிய திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடாற்ற முடியாத நிலை பெருங்குறையாக அமைந்துள்ளமை வேதனை தருவதாகும் இவ்வேதனையை இது போன்ற பெருவிழாக்கள் போக்கிவருவது இறைவன் பேரருளே.

கொடுமை மிக்கதொரு பழிமிகுந்த வேளையிலே "துள்ளி வருகுது வேல்" என்ற பேரொலி முழக்கம் மெள்ளச் செவிகளில் ஒலிக்கிறது. ஒளி மயமான எதிர்காலம் எம்முள்ளத்தில் தெரிகிறது. அனைவரும் துணிவோடு உழைத்து எம் தெய்வ நெறியாம் சிவநெறியும் செந்தமிழும் திருநீறும் ஐந்தெழுத்தும் திகழ அரும்பணி புரிந்து உயர்வோம்.

கா. இரகுநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிரியா வித்தகர்
### சிவஸ்ரீ கந்த. சிவபாதசுந்தரக்குருக்கள் அவர்களின்

# ஆசி உரை

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர/
வாமன ரூப மஹேச்வர புத்ர
விக்கின விநாயக பாத நமஸ்தே//

அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாகி ஆநந்த பூர்த்தியாகி விளங்கும் இறைவன் வெயிலுகந்த விநாயகப் பெருமானாக நாயன்மார்கட்டுப் பதியிலே பல்லாண்டு காலமாக அருள் உருவத் திருமேனி தாங்கி மக்களுக்கெல்லாம் அருள் பாலித்து வந்திருக்கிறார். இந்த ஆலயம் தமிழ் அரசர்களால் கட்டப் பெற்று வழிபாடு செய்யப்பட்டு வந்ததாக மூதாதைகள் சொல்லக் கேள்வி. இந்த ஆலயம் காலப் போக்கிலே இயற்கைச் சக்திகளினாலே கிலமடைந்தது. புதுக்கி அமைத்து வழிபட வேண்டுமென்று பலரும் விரும்பினார்கள். திருவருள் கூட்டி வைத்தது. இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு பாலஸ்தாபனம் செய்து திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின. இன்று ஒரு அளவு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

வெயிலுகந்த விநாயகப் பெருமானது பெருங்கருணை கூட்டி வைக்கிறது. அதனால் ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 20ஆம் திகதி சுவாதி நட்சத்திர தினத்திலே மஹா கும்பாபிஷேக விழா நடைபெற வேண்டுமென்பது வெயிலுகந்த விநாயகப் பெருமானது சித்தம். அதன்படி இந்த மஹா கும்பாபிஷேக விழா நடைபெறுகிறது. மஹா கும்பாபிஷேக பலத்தினாலே வெயிலுகந்த விநாயகப் பெருமானது பெருங் கருணையினாலே நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சம், பசி, வறுமை நீங்கி அட்ட ஐஸ்வரியங்களும் உண்டாக வேண்டும், பகைமை, சண்டை நீங்கி சாந்தம், சமாதானம் உண்டாக வேண்டும். நோய், துன்பம் நீங்கி பூரண ஆயுளும் சுகதேகமும் உண்டாக வேண்டும். சகல மக்களும் சுபீட்சமாக வாழ வேண்டும் என உள்ளன்புடன் விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்து ஆசீர்வதிக்கின்றேன்.

வெயிலுகந்த விநாயகப் பெருமானது பெருங்கருணை இந்த மஹா ஜநங்கள் எல்லோருக்கும் சகல சீவராசிகளுக்கும் உண்டாக வேண்டுமென்று ஆசீர்வதிக்கின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

—க. சிவபாதசுந்தரக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் உகந்தவர் எம் நெஞ்சங்களும் உகப்பார்

—ஆசிரியர்

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. பதினாறாம் நூற்றாண்டுவரை யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த தமிழரசர் தமது தலைநகராகிய நல்லூரின் கிழக்கிலே காவற்கடவுளாய் விநாயகப் பெருமானை எழுந்தருளுவித்து ஆலயம் சமைத்தமை வரலாறறிந்த செய்தி. அவர்கள் எம்பெருமானுக்கு இட்டுவழங்கிய திருநாமம் வெயிலுகந்த பெருமான் என்பது வெயிலுகந்த விநாயகர் நாயன்மார்கட்டிலிருந்து இந்தக் கிராமத்து மக்களை மட்டுமன்றி அனைத்து அடியார்களையும் அவர்களுடைய விக்கினங்களைப் போக்கி இடரினும் தளரினும் அருந்துணையாய் நின்று காத்தருளுகின்றார்.

காலந்தோறும் இப்பெருமானின் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வதிலே ஆலய பரிபாலகர்கள் ஈடுபட்டு, சில ஆண்டுகளுக்கு முன்பு தூபி எழுப்பிக் கும்பாபிடேகம் செய்வதற்கான பெரும்பணியில் ஈடுபட்டனர். ஆனால் எதிர்பாராத இடையூறுகளும் நாட்டில் நிகழ்ந்துவரும் அசம்பாவிதங்களும் அவர்களின் முயற்சியைத் தடைசெய்து காலத்தை நீடிக்கச் செய்ததும் விநாயகப் பெருமானின் சோதனை என்றே கொள்ளலாம்.

எனினும் சோதனைமேற் சோதனைவரினும் அவரருளாலே எடுத்தகாரியத்தை முடித்தே தீருவோம் என்று அவர்கள் முனைந்து மேற்கொண்ட பெருமுயற்சியினாலே 02-06-93 ஆம் நாள்கோயிற் புனருத்தாரணப் பணிகள் நிறைவேறிக் கும்பாபிடேகம் நடத்தவும் திருவருள் பாலித்தது.

கும்பாபிடேக நிறைவாக வெளியாகும் இம்மலரினை மகிழ்ச்சியோடு விநாயகப் பெருமானின் திருத்தாள்களுக்குப் படையலாக்கி, அவர் அடியார்கள் கைகளிலே மிகுந்த மகிழ்ச்சியோடு தவழ விடுகின்றோம்.

இம்மலர் உருவாகத் தமது ஆங்கங்களை உதவிய அறிஞர் பெருமக்களுக்கும் உரிய காலத்தில் அச்சிட்டுதவிய திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும் வெயிலுகந்த விநாயகப் பெருமானின் அருள்கிடைக்க வேண்டி வழிபடுவதோடு ஆலய பரிபாலகர் சார்பில் அன்புகலந்த நன்றியினையும் சமர்ப்பிக்கின்றோம்.

வேழ முகத்து விநாய கனைத்தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு வீதியில் எழுந்தருளியிருக்கும்

## ஆலயத்தின் தொன்மையான விநாயகர் திருவுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழகத்திலே நல்லைப் பதியினை
நயந்து வீற்றிருக்கும்
அருள்மிகு
வெயில் உகந்த விநாயகர்

# திருவிரட்டை மணிமாலை

## சொக்கன்

### காப்பு

உடம்பில் வலிமை உளத்திலே ஞானம்
இடம்பெறவே ஆக்குகின்ற எந்தாய்- நடம்பயிலும்
நாதனின் மைந்தாஎன் நற்றமிழ்ப்பா மாலைக்குன்
ஆதரவை ஈந்தே அருள்.

### நூல்

ஆராமை மிக்க அடியார்கள் போற்றிசைக்கக்
காரானை யுன்முகத்தைக் காட்டியருள் – சீரான
நல்லையில் வெய்யில் உகந்திட்ட நாயகனே!
செல்வ! எமதுளத்தைச் சேர். 1

சேரிடம் உன்றன துள்ளமே என்றுநாம் சிந்தைசெய்து
பாரினில் தீய உளவெலாம் மாய்க்கப் பலவகையாய்
ஒருவம் ஆனால் அகந்தையுற் றெம்மை உருக்குலைத்து
நாரெனப் போக்க உலைகுவம் தூய்மை நயந்தருளே 2

நயமென்றும் நட்டமென்றும் நாங்கள் நினைத்தல்
பயனில் அறியாமை பாவம்–அயன்தலையில்
இட்ட விதிபோக்கி எந்தம் பவம்நீக்கிச்
சிட்டனே பேரருளைச் செய். 3

செய்வன யாவையும் உன்பணி யேயினிச் செத்தொழியா
துய்வன வெண்ணியே உன்திருத் தாள்மலர் ஒன்றியுளம்
பொய்யெனக் கொள்பவை ஓட்டியே உன்னைப் புகலடைந்து
நையுதல் போக்க அருளுவை நல்லைவி நாயகனே. 4

நாயகனாய் வெய்யில் நயந்துமே வீற்றிருந்து
தாயனைய அன்பைத் தருவோய்நீ– பேயரெமைத்
தள்ளாது காப்பாய் தகைமையிலார் என்றெம்மை
எள்ளாதே எம்முளவம்ந் தெய்து. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்திய பாவங்கள் தீயில் துரும்பாய் எரிந்திடச்செய்
பெய்துன் னருள்மழை யாலெமை மேன்மை பிறங்கிடவை
கொய்து மலர்களைத் தூவுதல் நீக்கிக் குலவுளங்கள்
துய்ய மலர்களாய்ச் சூட்டிநின் றேத்துவம் துங்கவனே. 6

துங்கக் கரிமுகனே தோடார் தொடையானே!
பங்கப் பிறைசூடி பாலகனே! - எங்களது
விக்கினங்கள் போக்கும் விநாயகனே! வெய்யிலினிற்
புக்கவனே! நீஎம் புகல். 7

புகவே அமரர்கள் ஆற்றா திடர்ப்பட்டுப் புன்மையுற
அகமே திருக்கோயில் அக்கிய தொண்டருக் கன்புடனே
மிகவாம் ஒளிக்காட்சி நல்கியும் மேன்மையாம் வீடளித்தும்
அகலத் தருமருள் அத்தனே எந்தமை ஆள்பதியே. 8

பதித்திடுவாய் ஞானப் படரொளியை அன்பர்
நிதித்திராளாய் என்றுமே நிற்பாய் – உதித்துவரும்
சூரியர்கள் கோடி சுடரும் ஒருசுடராய்ச்
சாரினும் ஈடிலா தாய். 9

தாயினும் நல்ல தலைவனின் மைந்தனை சந்நிதியைப்
பாயுறும் கண்ணீர் பரிந்திடு நெஞ்சம் பரிதவிப்பு
தேயுறு மேனி இவைகொடு நாள்தொறும் சேர்ந்திடுவார்
போயுறு நல்ல கதியினைக் காட்டெங்கள் புண்ணியனே. 10

புண்ணியங்கள் செய்யோம் புலைத்தொழில்க ளேபுரிவோம்
விண்ணர்நாம் என்றே வியந்திடுவோம்–உண்ணெகிழ்ந்துன்
நாமங்கள் ஓதோம் நரகம் சரதமினி
ஏமமும் உண்டே எமக்கு? 11

எமக்கென் னெனஇருந் தெய்த்தோம் துயருக் கிடமளித்தோம்
சுமைக்கென் றிருந்திடும் பொய்யாம் உடலைச் சுகமெனநாம்
இமைக்கும் பொழுதும் மறவா திருந்ததற் கூட்டுகின்றோம்
நமக்கும் கதியுள தோசொல்லு வாயெங்கள் நற்றவனே! 12

நற்றவத்தார் நற்றவமே! நல்லைக் கிறையுன்னைப்
பற்றுவார் பற்றறுப்பை பற்றில்லாய்!-சுற்றமெலாம்
கூடியழ நாம்பலகாற் கூற்றுவற்கா ளாகாதே
நாடியுணைக் கூடவருள் நல்கு. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கும் கொடைமுகில் நல்லோர்க் கரணெங்கள் நாள்களவை
பல்கும் வழியடைத் தென்றும் புரக்கின்ற பாலகனும்நீ
செல்லும் நெறியில் திசைகாட்டி யாயெமைச் சேவகங்கொள்
ஒல்லும் வகையெலாம் உன்பணி பூண்டே உயர்குவமே. 14

உயர்வுக்கு நெஞ்சே! உனக்கொன் றுரைப்பன்
அயர்வற்றே ஐங்கரனுக் காளாய்த்-துயர்விட்டு
வாழ்வாய் அதுவொன்றே மாபெரிய ஆனந்தம்
ஆழ்வாய் அருட்கடலஃ தாம். 15

ஆம்எனல் இல்லை எனலெனும் ஆய்வுகட் கர்த்தமிலை
தீமையென் றோர்ந்து திகழ்விக்ன ஈசுரன் செம்மலர்த்தாள்
காமுற்று நம்பிக் கதியினை வேண்டிக் கசிந்தழுவோம்
பேய்மனச் சேட்டைகள் தீர்த்திடும் நாதன் பிரசன்னமே. 16

பிரசன்ன மார்முகமும் பேணுபுயம் நான்கும்
உரைசால் மதிநிறமும் ஓங்கும்--தரமார்ந்த
வெள்ளுடையும் விக்கினங்கள் வீக்கியே சாந்தியளித்
துள்ளுறைவான் மேலார் உளர்? 17

உளரெமக் குற்றார் உறவினர் நண்பரென் றுள்நினைந்து
தளர்வவர் நீங்கில் தலைப்பட நாளும் சலித்திடுதல்
களைகணற் றோமெனக் கண்ணீர் பெருக்கிக் கதறியழல்
உளைவுறல் மாயையென் றோர்ந்திடும் உற்றான் உயர்கரியே 18

கரிமுகத்தான் ஞானக் களிமதத்தான் தந்தம்
பரிகரத்தான் இன்பம் பகிர்வான் — கிரியகத்தான்
செல்வமகன் பார்வதிக்கும் சேயாவான் எங்களது
செல்வமிவன் சேரின் செயம். 19

செயந்தனை வேண்டித் தினந்தினந் தேடிச் செபித்திடுவோம்
கயந்தனை எங்கள் கனியினை இன்பருள் கற்பகத்தை
வயம்பணில் வானமும் கையுறும் விண்ணின் வழிதிறக்கும்
அயன்திரு மாலுக்கும் அப்பா லமர்ந்தருள் ஆருவமே. 20

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெயிலுகந்த விநாயகர்தாள் உயிரடைவு பாமாலை

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

அஞ்செழுத் தோரெழுத்தாய் அமைஆரண மூலத்துளாய்
மஞ்செனத் தண்கருணை பொழிமாகரி மாமுகனே
தஞ்செனத் தாளடைந்தார் சரணுவாய் குடமுழுக்காம்
மஞ்சனத் தால்மகிழ்வாய் வெயில்தன்னை மகிழ்ந்தவனே. 1

ஆதியன் ஆதிரையன் அருள்அம்பிகை பாலகனே
பூதிய போற்றுகின்றார் இடர்போக்கிப் பொருண்முடிக்கும்
நாதிய நம்பிநல நாயன்மார்கட் டுகந்தவனே
வேதிய நின்சரணம் வெயில்வேண்டும் விநாயகனே. 2

இல்லையென் பாரெதிரே சாணப் பிள்ளையா ராயிருப்பாய்
கல்லையென் பார்முகத்தே பலசித்திகள் காட்டிநிற்பாய்
நல்லையென் பாரெவர்க்கும் ஞானபோனகம் நல்குகின்றாய்
எல்லைஇல்ல லாயிரங்காய் வெயில்இன்புற் றிருப்பவனே. 3

ஈடிணை இல்லவனே எங்கள்ஏரம்ப எய்ப்பில்வைப்பே
தேடிணை யாரடிகள் சென்னிசேர்த்திவந் திப்பவரை
வாடிநை யாதுவளத் தோடுயர் வாழ்வில்வைப்பாய்
நாடினை நம்பரமோ நாயன்மார்கட்டுக் கோயிலையே. 4

உம்பர் உவப்பமுனும் கயமாமுகன் ஆதியுள்ள
வம்பர் கிளைவதைத்தாய் வடக்கோடுதெற் கோடிவந்த
கும்பலை ஓட்டுகந்தாய் குட்டிக் கும்பிடல்ஏற்றருள்வாய்
கொம்பலை தண்டலைசூழ் நாயன்மார்கட்டுக் கொற்றவனே, 5

ஊட்டிய நம்பியொடும் உலகாண்டவன் காணஉண்டே
காட்டிய கற்பகத்தின் கனிபோலும் திருமுறையாம்
பாட்டிய லின்சுவையே பருகிப்பர போகமுற்றார்
நாட்டிய கோயிலுறை வெயில்நாடிய நம்பரனே 6

எண்ணும் இடங்களெலாம் உகந்தெய்தி இருந்தருள்வாய்
கண்ணும் கருத்துமெலாம் கலப்பாங்கண நாயகனே
உண்ணும் சுவையமுதே உமைதேசில் உதித்தவனே
நண்ணும் நமக்கருளும் நாயன்மார்கட்டில் நாயகனே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றவர் அன்பரென்றே நாயன்மார்கட்டுப் பட்டிருக்கும்
ஏற்றம தாம்பதியில் வெயில்ஏற்றுறை ஏகதந்தா
ஏற்றம தாம்மயிலோய் அதைஏரகற் சீந்தசெல்வா
ஏற்பவ ராகவிடா தெமைஈகைய ராக்கிவையே. 8

ஐந்து கரத்தவனே அச்சந்தீர்த்தப யந்தரவா
ஐந்து புலக்களிறும் அடர்அங்குச பாசதரா
ஐந்து சமயிகளும் முதல்அர்ச்சிக்க நின்றவனே
ஐந்து முகத்தவனே வெயில்வேண்டும் அருட்கடலே. 9

ஒன்று கரிபரியூர் கயிலாயஞ்செல் தோழருடன்
அன்றுமுன் ஔவைசெல அருளாற்றுப் படுத்தவனே
வென்றுபுலன் களைந்தார் விழுங்கும்வினை தீர்கனியே
நன்றுவெயி லுகந்தாய் நல்குநாயன்மார் கட்டுடையாய் 10

ஓதி உணரவொணாய் ஞானபூதராத் துச்சியனே
பூத கணபதியே புகழ்போற்றிப் புனிதநின்றன்
பாத கமலமுற்றோம் பழிபாத கமலங்களை
நாத வடிவினனே நம்பினோம்வெயில் நாடியவா. 11

ஔவிய மில்மனமே அமரர்அன்பர்கள் ஆட்டுபெஞ்ச
கௌவிய மஞ்சனனே கந்தசாமிக்கு முன்புகனி
வௌவிய வல்லபநின் மலர்த்தாள்மற வாவரமே
வெஃகிய தீதிகண்டாய் வெயில் வேண்டும் சிவமணியே 12

## மெய்த்துதி

அக்கங்க மெய்யினன் நச்சஞ்ச ஊர்பணி யாமரிதான்
கட்டுண்ட சொல்லற ஏத்தந்தச் செவ்வியன் காதலொடே
அப்பம் பொரியவல் மோதகம் எள்ளுண்டு தாள்வயிற்றன்
பற்றன்றி இல்லைஅப் பற்றொன்றை வாழ்வுறப் பற்றுமினே 13

போற்றி ஓம் சித்திபுத்தி நாயக கணேச போற்றி

(உயிரடைவு பாக்கள் " பொன்னார் மேனியனே " முதலாக உள்ள சுந்தரர் தேவாரப் பாடலிசையமையப் பாடியவை. கலித்துறைப் பாடல் போலவும் அமைகின்றன. இறுதி மெய்த்துதிப்பா கட்டளைக் கலித்துறையாக அமைந்தது.)

கட்டுண்டசொல் என்றது சாபம்

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரண முகனே

ராகம்-ஹம்சத்வனி

தாளம்-ஆதி

பல்லவி

வாரணமுகனே வரந்தருவாய் – அருள்
நாரணன் மருகோனே! நங்கௌரி பாலகனே!

அநுபல்லவி

ஆரணங் கிருவரொடு அமர்கந்த சோதரனே!
பூரணனேவெயி லுகந்த விநாயகனே! (வாரண)

சரணம்

மிக்குயர் நாயன்மார் கட்டில் அமர்ந்த வுன்னை
தக்கதோர் துணையான குருவெனவே பணிந்தேன்
முக்கணனே முதல்வா! முன்னவனே இறைவா!
இக்கண மிரங்கியே எனக்கு முன்னே வந்து (வாரண)

O

## கண்குளிரக் காட்சி

ராகம்-ரஞ்சனி

தாளம்-ஆதி

பல்லவி

கண்குளிரக் காட்சி தந்தாய் ஐயனே – நல்ல
பண்பொழுகும் நாயன்மார் கட்டினிலே அமர்ந்து

அநுபல்லவி

எண்திசையும் புகழும் வெயி லுகந்தவா
புண்யமதை அருள் விக்ந விநாயகனே (கண்குளிர)

சரணம்

உம்பரும் வந்துநிதம் உவந்து பரவிடும்
அம்புஜ மலரிணை அடியனும் துதிசெய்தேன்
நம்பினோர்க் கருள்செய்யும் நாதனே நானுன்னை
விம்மியழும் நெஞ்சால் கெஞ்சிடும் வேளை வந்து (கண்குளிர)

O

## காத்தருள் தருவாய்

ராகம்-நாட்டை

தாளம்-ஆதி

பல்லவி

காத்தருள் தருவாய் கணபதியே – புகழ்
பூத்தபதி யான நாயன்மார் கட்டில் நின்று

அநுபல்லவி

மூத்தமறை புகழும் வெய்யில் உகந்தஜயா!
ஏத்தி யடியார்கள் இறைஞ்சிடும் போது வந்து (காத்தருள்)

சரணம்

தும்பிமுகன் உன்னை உள்ளமதில் வைத்து
நம்பியே கைதொழுதேன் நாடும்பொருள் அருள்வாய்
இம்மியும் குறையாத இன்னருளை நல்கி
நம்மிருள் மலமதுபோய் நாளுமின்பம் பெருக. (காத்தருள்)

–நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கினங்கள் போக்க எழுந்தருள்க

முன்னைத் தலைநகரின் கிழக்கெல்லை தனிலமர்ந்து
மிகுகாவல் தெய்வமெனத் திகழ்ந்தொளிருந் தேவதேவா
துன்பமதைத் தீர்த்தமரர் இன்பமுற வாழ்ந்திடவே
கஜமுகா சுரன்தனை வதைத்திட்ட தலைவாளம்
இன்னலது போக்கியரும் அமைதியது நிலவிடநின்
இன்னருளைத் தந்திடுவாய் இனிமையெலாஞ் சேர்த்திடுவாய்
உன்னையே நாடிநிதம் உளமுருகி வேண்டுகின்றோம்
நாயன்மார் கட்டிலுறை வெயிலுகந்த விநாயகனே

இந்திரர்க்காய்க் காகமெனத் தோன்றியருந் தமிழ்முனிவன்
அகத்தியன்கைக் கமண்டலமுஞ் சரித்தவனும் வளர்த்திட்ட
நந்தவனஞ் செழித்திடவும் நாடுவளங் கொழித்திடவும்
நற்காவிரியைப் பெருகவைத்த கருணைமிகு கணபதியே
தந்தையாய் உலகமெனும் உண்மைதனை உணர்விக்கும்
தத்துவத்தின் நாயகனே தொழுகின்றோம் உன்னடிகள்
வந்தருள்க விக்கினங்கள் போக்கிடவே வல்லவனே
நாயன்மார் கட்டிலுறை வெயிலுகந்த விநாயகனே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான
# பண்ணிசை மன்ற வாழ்த்துரை

இறைவன் ஏழிசையாயும் இசைப் பயனாயும் அமைந்தவன். இடரினும் தளரினும் பண்ணொன்ற இசை பாடி இறைவன் புகழைப் பாடினால் அவன் அடியார் துயர்களைத் தீர்த்து அருள் புரிவான். ஈழ வேந்தனாகி, ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்த இராவணனின் வரலாறு இதற்குச் சான்றாகும்.

சிறுவயது முதலே எமது சூழலிலுள்ளார் பண்ணொன்ற இசை பாடும் பயிற்சியைப் பெறவேண்டுமென்ற பெருநோக்குடன் தேவஸ்தானத்தினர் பண்ணிசை மன்றத்தை நிறுவி, அதன் பணிகளுக்கு உதவி, நெறிப்படுத்தினர். இதனால் எமது சூழலில் பண்ணிசை வல்லார் தொடர்ந்து உருவாகி வருகின்றனர். பண்ணிசையில் ஆர்வத்தையும் திறமையையும் வளர்க்கும் நோக்குடன் தேவத்தானத்தினரின் துணையுடன் நாம் பண்ணிசைப் போட்டிகளையும் பண்ணிசை அரங்குகளையும் நடத்திவந்துள்ளோம்.

பண்ணிசையைத் திட்டமிட்டு வளர்க்கும் ஆலயத்தில் குடமுழுக்கு விழா நிகழ்வதும் மலர் வெளிவருவதும் எமக்குப் பெரும் உள நிறைவைத் தருகின்றன.

அருள்மிக வெயிலுகந்த விநாயகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டி வாழ்த்துகிறோம்.

பண்ணிசை மன்றத்தினர்

---

## நான்கு யுகங்களிலும் விநாயகர்

கணபதி கிருதயுகத்தில் தீ போன்ற திருமேனியும் சிங்க வாகனமும் பத்துத் திருக்கரங்களும் கொண்டு விநாயகர் என்ற திருநாமத்தோடு விளங்குவார். திரேதயுகத்தில் ஆறு திருக்கரங்களும் வெண்ணிறத் திருமேனியும் மயில்வாகனமும் கொண்டு மயூரேசர் என அழைக்கப்படுவர். இக்காலத்தில் இவரின் திருநாமம் கஜானனன் என்பது. மேனியின் நிறம் சிவப்பு. கலியுகத்திற் புகைநிறம் கொண்டு தும்ரகேது என்ற திருநாமத்தோடு இருதிருக்கரங்களும் குதிரை வாகனமும் உடையவராய் விளங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நாயன்மார்கட்டு, அருள்மிகு
வெயிலுகந்த விநாயகர்

## ஆலய பரிபாலகர்கள்



சிவஸ்ரீ சோ. பாலசுந்தரக் குருக்கள்



திரு ச. சோதிநாதன்



சிவஸ்ரீ பா. விநாயகமூர்த்திஐயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

265
YAL
AR

# யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பிரதான விநாயகர் ஆலயங்களும் வழிபாடும்

**பேராசிரியர் வி. சிவசாமி,**
*தலைவர், சமஸ்கிருதத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

வேதமுதல்வனாகவும் பிரணவ ஸ்வரூபியாகவும் விளங்கும் விநாயகப் பெருமானின் வழிபாடு யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல இடங்களிலும் பரவலாக விளங்குகின்றது. சைவத்தின் அகச் சமயங்களில் ஒன்றாக விளங்கும் காணபத்தியம் அல்லது கணபதி வழிபாடு இங்கு தனிப்பட்ட வழிபாடாக அன்றிச் சைவத்தின் ஒன்றிணைந்த முதன்மை வழிபாடாகவும் திகழ்கின்றது. சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அவருடைய திருவருட்சக்தியாக விளங்கும் உமாதேவி ஆகியோரின் மூத்த திருக்குமாரனாகவும், முருகனின் மூத்த சகோதரனாகவும், திருமாலின் மருகனாகவும் திகழும் விநாயகரின் வழிபாடு, விநாயகருக்கான கோவில்களில் மட்டுமன்றி, சைவத்தின் ஏனைய கடவுளருக்கான கோவில்களிலும் ஒன்றிணைந்த வழிபாடாகவும் விளங்குவது கண்கூடு. தனக்கு மேலான ஒரு தலைவனில்லாதவராக, விநாயகராக விளங்கும் அப்பெருமானின் வழிபாடு ஏற்கனவே குறிப்பிட்டவாறு கோவில்களிலே மட்டுமன்றி, வீடுகளிலும், அலுவலகங்கள், குறிப்பாகக் கல்வி நிலையங்கள் எனப்பல இடங்களிலும் நிலவுகின்றது. இந்து சமயத்திலுள்ள எவ்வகைக் கிரியைகளிலும், நிகழ்ச்சிகளிலும் பொதுவாக அவருக்கே முதலிலே வழிபாடு நிகழும். இவரைக் குறிக்கும் "சுக்லாம்பாதரம்" எனத் தொடங்கும் தியானசுலோகமும் "கணானாம்த்வாகணபதிம்" எனத் தொடங்கும் வேதமந்திரமும் தொடக்கத்தில் இடம் பெறாத வைதிக சமயக் கிரியைகள் இல்லையெனலாம். வழிபாட்டு முறையிலும் இவரின் வழிபாடு எளிமையானது; சுலபமானது. அவரை அருவமாகவும், உருவமாகவும் கல், செம்பு முதலிய உலோகங்கள், மரம், மண், மஞ்சள், பசுச்சாணம் எனப் பல பொருட்களாலான மூர்த்தியாகவும் அவரை அவரவர் வசதிக்கும், வழிபாட்டு முறைக்கும் ஏற்ப வழிபடலாம். மேலும் இவரின் வழிபாடு வேதாகம முறைப்படியும் வேறு முறைப்படியும் நடைபெறலாம். அவருடைய சாந்நித்தியத்தினை எவரும் எந்த இடத்திலும் அவரவர் வசதிக்கேற்றபடி ஏற்படுத்தலாம். ஏற்கனவே குறிப்பிட்டவாறு கோவிலில் மட்டுமன்றிப் பிற இடங்களிலும், நீர்க்கரைகள், மரங்களின் கீழும் தெருவோரங்களிலும் அவருடைய வழிபாடு நிகழும். இடம், வசதிக்கேற்றவாறு கிரியைகள் பாரியனவாகவும் எளிமையானவையாகவும் இடம் பெறும். கல்வித் தெய்வமாக மட்டுமன்றிச் செல்வம், விவசாயம், காதல், பாதுகாப்புத் தெய்வமாக, யாவருக்கும் மேலான முழுமுதற் கடவுளாகவும் பரப்பிரம்மமாகவும், அன்பர்களுக்கு எளிதில் இரங்கி அருள் சுரக்கும் அருட் பெருஞ் சோதியாகவும் அவர் இலங்குகின்றார். அவர் மேலான பிரமச்சாரியாகக் கருதப்படினும், வல்லபா (அன்பு, காதல்) எனும் ஒரு சக்தியுடனும் அல்லது சித்தி, புத்தி எனும் இரு சக்திகளுடனும் திகழ்கிறார். மனிதருக்கு சித்தியும் புத்தியும் அவசியம். அவற்றை அவர் வழங்குகிறார். அவர் காதலுக்கும் தெய்வம் எனும் கருத்து எம் நாட்டில் வலியுறுத்தப்படாவிடினும் அவருடைய சக்தியாகிய "வல்லபா" இவ் அம்சத்தினைச் சுட்டிக் காட்டுகிறார். ஆனால், இக்கருத்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள கிழக்காசிய நாடாகிய யப்பானிலே நிலவுவது கவனித்தற்பாலது. இவரது வழிபாடு வடக்கே மத்திய ஆசியா தொடக்கம் தெற்கே இலங்கை வரையும், கிழக்குத் திசையாக இந்தோனேசியா, மலேயா தீபகற்பம், சிங்கப்பூர், இந்தோசீனா, சீனா, யப்பான் வரையும் நிலவுகின்றது. இந்துசமய மரபுகளில் மட்டுமன்றி, பௌத்த, சமண சமய மரபுகளிலும் இவரின்வழிபாடு உள்ளது. இக்காலத்திலே இந்துக்கள் சென்றுள்ள இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலிய மேற்குலக நாடுகளிலும் இவரின் வணக்கம் பரவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

NA

இலங்கையிலே விநாயக வணக்கம் கிறித்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டே நிலவி வரு
கின்றதென்பது இங்குள்ள புராதன பிராமிச் சாசனங்களாலும், மிஹிந்தலையிலுள்ள கண்டக
சேதியாவிலுள்ள சில சிற்பங்களாலும், பிறவற்றாலும் அறியப்படுகின்றது. இங்கு இந்து சமய
வழிபாட்டில் மட்டுமன்றி, பௌத்த வழிபாட்டிலும் இவர் இடம் பெற்றுள்ளார். தமிழக வரலாற்
றாசிரியர்களிலொருசாரார் பல்லவப் பேரரசனான நரசிம்மவர்மன் (மாமல்லன்) சமகாலத் தக்
கணப் பெருவேந்தனும் சாளுக்கியப் பெருமன்னனுமாகிய இரண்டாம் புலிகேசியை வென்று,
தலைநகர் வாதாபியிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டுவந்த பொருள்களிலொன்றாகப் பிள்ளை
யார் சிலையும் இடம்பெற்றதெனவும் இதன் பின்னரே தமிழ் நாட்டிலே விநாயகர் வழிபாடு
ஏற்பட்டதெனவும் கூறுவர். ஆனால், இது சரியான கருத்தா என்பது ஐயத்திற்கு இடமாகும்.
ஏனெனில், ஏற்கெனவே தனது அரசிலே நிலவி வந்ததும் தாம் விரும்பியதுமான தெய்வத்தின்
சிலையையே பல்லவ மன்னன் கொண்டுவந்திருப்பான். இத்தகைய போக்குத்தான் பொதுவாக
இந்திய வரலாற்றிலே காணப்பட்டுவந்துள்ளது. முற்றிலும் புதிய தெய்வத்தின் சிலையொன்
றினை அவ்வரசன் கொண்டுவந்தாலும் அதற்கு உடனடியான பிரபல்யம் ஏற்படுதல் சுலபமன்று.
ஏனெனில் சமகாலச் சைவ நாயன்மாரான அப்பரும், திருஞானசம்பந்தரும் தத்தம் தேவாரங்
களிலே பிள்ளையாரைப் போற்றியுள்ளார்கள். மேலாக, அண்மையிலே காவேரி ஆற்றின் கீழ்ப்
பகுதிப் பிரதேசத்திலே நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளின்படி கி. பி. 4, 5 ஆம் நூற்
றாண்டளவைச் சேர்ந்த விநாயகர் சிலைகள் கிடைத்துள்ளன என இவற்றை நடத்திய சென்
னைப் பல்கலைக்கழக முன்னாள் வரலாறு, தொல்லியற் பேராசிரியர் ரி. வி. மகாலிங்கம்
குறிப்பிட்டுள்ளார். சில ஆண்டுகளுக்கு முன் மறைந்த தமிழ் அறிஞரான கி. வா. ஜகந்நாதன்
அவர்கள் பிள்ளையார் வழிபாடு சங்ககாலத்திலும் நிலவியதாகத் தமது உரையொன்றிலே கூறி
யுள்ளார். இக்கருத்துக்களையும் இலங்கையிலே கிடைத்துள்ள சான்றுகளோடு சேர்த்து நோக்கும்
போது இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் நிலவிய பழைய சமய வழிபாடுகளிலொன்றாக
விநயாகர் வழிபாடு விளங்கிற்று எனக் கொள்ளுதல் தவறாகாது.

இலங்கையின் வடபுலத்திலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிலே விநாயகர் வழிபாடு பல
நூற்றாண்டுகளாக நிலவி வந்ததெனலாம். கி. பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் இங்கு ஏற்பட்ட
போர்த்துக்கீசர், டச்சுக்காரரின் சமயசகிப்பின்மை, கலைஅழிப்புக் கொள்கை முதலியவற்றினாலே
இப்பிராந்தியத்திலுள்ள சமய நிறுவனங்கள், குறிப்பாகக் கோவில்கள் பெரும்பாலும் முற்றாகவே
அழிந்துவிட்டன. எஞ்சியவற்றுள்ளும் சில, எம்மவரின் வரலாற்றுணர்வு இன்மை, சமயப்
பற்றின்மை முதலிய காரணங்களாலே புறக்கணிக்கப்பட்டுள்ளன. எனினும், விநாயகரின் ஒரு
சில பழைய சிலைகள் நல்லூர், கந்தரோடை, வல்லிபுரம், பூநகரி போன்ற இடங்களிலே
கிடைத்துள்ளன. நல்லூரிற் கிடைத்த விநாயகரின் கற்சிலை யாழ்ப்பாணம் நூதனசாலையிலே
தற்போது வைக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் சோழப் பேரரசு காலத்திற்குச் சற்றுப் பிந்திய
தெனக் கொள்ளலாம். இது நல்லூரிலுள்ள பழைய சட்டநாதர் கோவிலைச் சேர்ந்ததாகும்.
கந்தரோடையிற் கிடைத்துள்ள சிறிய பிள்ளையார் சிலை சோழப் பெருமன்னர் காலத்தியதோ
அல்லது சற்றுப் பிற்பட்டதோ எனக் கருதப்படுகிறது. இது போலவே, வல்லிபுரத்திலே திரு. செல்வ
ரத்தினம் (கலைஞானி) என்பவராலே கண்டெடுக்கப்பட்ட சிலையினையும் கொள்ளலாம். 1989ஆம்
ஆண்டு முடிவிலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்று விரிவுரையாளர் ப. புஷ்பரத்தினத்தி
னாலே பூநகரியிலே (வெட்டுக்காட்டிலே) கண்டெடுக்கப்பட்டுள்ள விநாயகரின் கற்சிலை பல்லவர்
காலத்தின் பிற்பகுதி (கி. பி. 8, 9 ஆம் நூற்றாண்டு) அல்லது சோழரின் முதற்கட்ட காலத்
தினைச் (கி. பி. 10 ஆம் நூற்றாண்டு அளவில்) சேர்ந்ததெனக் கருதப்படினும், அது பிற்பட்ட காலத்
தியது போலவும் காணப்படுகிறது. இதே வரலாற்றாசிரியர் பொலநறுவையிலுள்ள சோழரின்
இரண்டாம் சிவதேவாலயம் போன்ற ஒரு சிவாலயத்தினை, மேற்குறிப்பிட்ட இடத்திற்கு அண்மை
யிலுள்ள மண்ணித்தலையிலே கண்டுபிடித்துள்ளார். எனவே, யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே
சோழப் பேரரசு ஆதிக்க மேற்படு முன்னரே விநாயகர் வழிபாடு நிலவியிருக்கலாம் சோழர் தொடர்
புகளைத் தொடர்ந்து இவ்வணக்கம் மேலும் பிரபல்யமடைந்திருக்கலாம். பொலநறுவ, திருகோண

மலை போன்ற இடங்களிற் போன்று யாழ்ப்பாணத்திலும் சோழர் கால விநாயகர் சிலைகள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் பிறசான்றுகளைச் சேர்த்து நோக்கும் போது அவர்களின் ஆட்சிக்காலத்திலும் இங்கு விநாயகர் வழிபாடு நிலவியிருக்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

ஆனால், கி. பி. 13 ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டெழுந்த தமிழரசிலே சைவம் நன்கு நிலவிவந்துள்ளது. விநாயகர் வழிபாடும் பிரபல்யமாக விளங்கிற்று. யாழ்ப்பாண வரலாற்றை, மரபு வழியாகப் பேணப்பட்டு வந்த செய்திகளின் அடிப்படையிலே தொகுத்து எழுதிய மாதகல் மயில்வாகனப்புலவர் தமது யாழ்ப்பாண வைபவமாலையிலே முதல் அரசனான சிங்கையாரியன் நல்லூரிலே தலைநகரை நிறுவிய போது நாற்றிசையிலும் தலைநகரை அணிசெய்து பாதுகாக்கும் வகையில் பல கோவில்கள் நிறுவினான் எனக் கூறியுள்ளார். அவையாவன: கிழக்குத் திசையிலே வெயிலுகந்த பிள்ளையார் கோவில், மேற்குத் திசையிலே வீரமாகாளியம்மன் கோவில், வடதிசையிலே சட்டநாதர், தையல்நாயகி அம்மன், சாலை விநாயகர் கோவில்கள், தென் திசையில் கைலைவிநாயகர், கைலாயநாதர், கைலைநாயகி கோவில்கள் என்பனவாம். பின்னைய மூன்றினையும் அவன் பின்னர் நிறுவினான் எனக் கூறப்படினும், இங்கு நிறுவப்பட்டதாகக் கூறப்படும் கோவில்களிலே விநாயகர் ஆலயங்களே கூடுதலானவை. இவற்றுடன் மரபுவழியாகக் கூறப்படும் செய்திகளின்படி, மேற்குத்திசையிலே (வைபவமாலை குறிப்பிடாத) தலங்காவற் பிள்ளையார் கோவில் நிறுவப்பட்டதாக அறியப்படுகின்றது. எனவே, தலைநகருக்கு நாற்றிசையிலும் விநாயகர் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. இன்னும், இக்கோவில்களுடன் (சாலைவிநாயகர் ஆலயம் எது என்பது கிடமாகத் தெரியாதாயினும்), கற்பகப்பிள்ளையார், மூக்கவிநாயகர், பண்டாரக்குளம் பிள்ளையார், கல்வியங்காடு சிந்தாமணிப் பிள்ளையார், நாயன்மார்கட்டு அரசடி விநாயகர், திருநெல்வேலி வீரகத்தி விநாயகர், கந்தர்மடம் பிள்ளையார், அக்கியாப் பிள்ளையார் நீராவியடிப் பிள்ளையார் முதலிய பல பிள்ளையார் ஆலயங்கள் இச்சுற்றாடலில் விளங்கி வருவதும் ஈண்டு குறிப்பிடற்பாலது. எனவே, யாழ்ப்பாண அரசின் தொடக்க காலம் தொட்டே விநாயகர் வழிபாடு பிரபல்யமாக நிலவி வருவது தெளிவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயுள்ள விநாயகர் ஆலயங்களை அவை அமைந்திருக்கும் இடம், தல விருக்ஷங்கள் (புனிதமரங்கள்), அரச தொடர்புகள், இறைவன் பற்றிய பல்வேறு கருத்துக்கள், சில கதைகள், ஐதிகங்கள் முதலியனவற்றின் அடிப்படையிலே வகுத்துக் கூறலாம்.

கோவில்கள் அமைந்திருக்கும் இடத்தின் பெயருடன் பல கோவில்கள் உள்ளன. எடுத்துக் காட்டுகளாக, பறாளை விநாயகர், மல்லாகம் பழம் பிள்ளையார், மண்கும்பான் வெள்ளைப் புற்றடிப்பிள்ளையார், ஊரெழு பிள்ளையார், மீசாலைப் பிள்ளையார், அராலி கரைப்பிட்டிப் பிள்ளையார், நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளையார், மாயக்கைப் பிள்ளையார் முதலிய பிள்ளையார் கோவில்களைக் குறிப்பிடலாம் இவற்றுள்ளே பறாளை விநாயகர், மல்லாகம் பழம் பிள்ளையார் போன்றவை பழமை வாய்ந்தவை. பறாளை விநாயகர் பற்றிச் சென்ற நூற்றாண்டிலே சின்னத்தம்பிப் புலவர் பாடியுள்ளார். இங்கு சுமார் இரு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதும் நேர்த்தியான சிற்பங்களைக் கொண்டதுமான மரத்தேர் உள்ளது. இது அழியாது பேணவேண்டியதொன்றாகும். இன்று யாழ்ப்பாணத்திலுள்ள காலத்தால் மூந்திய தேர் இதுவாயிருக்கலாமெனக்கொள்ள இடமுண்டு. மண்கும்பான் பிள்ளையார் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள தீவுப்பகுதியிலுள்ள பிரபல்யமான ஓர் ஆலயமாகும். இது போலவே மல்லாகம் பழம் பிள்ளையார், அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயங்கள் முதலியனவற்றையும் குறிப்பிடலாம்.

தலவிருக்ஷங்கள் அல்லது குறிப்பிட்ட இடங்களிலுள்ள பழைய புனித மரங்களின் பெயரால் அழைக்கப்படும் கோவில்களுக்கு உதாரணங்களாக மானிப்பாய் மருதடிப் பிள்ளையார், மானிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய் அரசடிப் பிள்ளையார், காரைநகர் மருதடி விநாயகர், நாயன்மார்கட்டு அரசடி விநாயகர், அல்வாய் ஆலடிப் பிள்ளையார் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் ஆலயம் பழமையானது. கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் அறுபதுகளிலே யாழ்ப்பாணத்திலே கிறித்தவ சமய போதனையிலீடுபட்டிருந்த போல் டயஸ் எனும் ஒல்லாந்த பாதிரியார் இவ்விடத்திலிருந்த இந்து ஆலயம் பற்றிக் கூறியுள்ளார். இது பெரும்பாலும், இப் பிள்ளையாருடைய பழைய ஆலயமாயிருக்கலாம்.

யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தமிழ்மன்னர் தொடர்புகளைக் கூறும் அல்லது நினைவூட்டும் ஆலயங்களிலே முதலிலே சிங்கையாரியன் அமைத்ததாகக் கூறப்படும் நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயத்தினைக் குறிப்பிடலாம். வேறு சில ஆலயங்களைப் போலவே இவ் வாலயமும் தமிழ்நாட்டுச் சமய பண்பாட்டு மரபுகளை நினைவூட்டுகின்றது. தென்தமிழ் நாட்டினைச் சேர்ந்த இராமநாதபுரத்திற்கு அண்மையிலுள்ள உப்பூரிலே வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் ஒன்றுள்ளது. இங்கு நிலவிவரும் மரபுகளின்படி சிவபெருமானைப் புறக்கணித்துப் பெரியவேள்வி செய்த தக்கனையும் அங்கு குழுமியிருந்த விஷ்ணு முதலிய தேவர்களையும் வீரபத்திரர் தண்டித்தார் எனவும், தண்டிக்கப்பட்டவர்களில் ஒருவனான சூரியன் தான் செய்த குற்றத்திற்குப் பரிகாரம் தேடி இவ்விடத்தில் வழிபட்டு உய்வு பெற்றான் எனவும் கூறப்படுகின்றது. விநாயகர் திருமேனி மீது தனது ஒளிக்கதிர்களான ஆயிரம் கரங்களைப் பரப்பியவாறு வழிபடுதற்கு அருளுமாறு சூரியன் வேண்டினான். அவ்வாறே ஆதவன்ஒளிக்கதிர்கள் தம்மீது படுமாறு கணநாதர் கோலம் கொண்டார். இதனால் ஆதபேச்சா (சூரியன் விரும்பும்) அல்லது வெயிலுகந்த விநாயகர் எனும் திருநாமம் பெற்றார்.'' இவ்விடத்திலே சுயம்புவாகத் தோன்றிய விநாயகரின் மகிமையைக் கேள்வியுற்ற இராமன் சீதையை மீட்கச் சென்றபோது வெற்றிக்காக இவ்விநாயகரை வழிபட்டான் எனக் கூறப்படுகின்றது. இவ் வாலயத்தின் தென்மேற்கில் சூரிய தீர்த்தம் உள்ளது. சூரியன் ஒளி விழுமாறு கோவிலின் நாற்புறமும் கம்பிகள் தற்பொழுது பொருத்தப்பட்டுள்ளன. உப்பூர் பிள்ளையார் எனச் செல்லமாக மக்கள் அழைக்கும் இப்பிள்ளையார் வடமொழியில் "ஆதபகிரண சந்துஷ்ட கணேசர்'' (சூரிய கிரணங்களால் நன்கு மகிழ்ச்சியடையும்) என வழிபடப்படுகிறார். இவ்விநாயகர் பற்றிய மேலும் பல மரபுகள் உள்ளன.

பாண்டிநாட்டிலுள்ள செவ்விருக்கை நாட்டிலிருந்து வந்து யாழ்ப்பாண அரசை நிறுவிய ஆரியச்சக்கரவர்த்தியுடன் (சிங்கையாரியனுடன்) அல்லது அவன் வருகையினைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட விநாயகர் அமைக்கப்பட்டிருக்கலாம் யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூருக்குக் கிழக்கே நாயன்மார்கட்டிலுள்ள இவ் வாலயம் திசைக்குக் காவலராக உள்ள இப்பெருமான் சூரியனை விருப்புடன் நோக்குதலைக் குறிப்பதாகவும் சூரியன் எழுந்து இருளை அகற்றுவது போல, அஞ்ஞான இருளையகற்றும் ஞானசூரியன் இவரே யென்பதையும், குறிப்பாகச் சூரியன் செய்த குற்றத்தினை மன்னித்து அவனுக்குத் திருவருள் பாலித்ததுபோல, ஆன்மாக்களின் பாவங்களை மன்னித்துத் திருவருள் பாலிப்பவர் இவர் என்பதையும் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

நல்லூருக்கு வடதிசையிலிருந்த சாலை விநாயகர் எது என்பது தெரியவில்லை. எனினும் அத்திசையில் இன்று சில விநாயகர் ஆலயங்கள் உள்ளமைபற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது. தென்திசையில் உள்ள கைலை விநாயகர் ஆலயம் குறிப்பிடற்பாலது. இது பற்றி இடைக்கால இலங்கையில் எழுதப்பட்ட கதிரைமலைப்பள்ளிலும் குறிப்பு உள்ளது. கைலாசமலையிற் போன்று நல்லூரிலும் அம்மை, அப்பனுடன் மூத்தபிள்ளையாகிய விநாயகரின் திருக்காட்சியினையும் ஒருங்கே காண யாழ்ப்பாண மன்னன் விரும்பினான் எனலாம். திருக்கைலாயம் பற்றிய சைவசமய மரபுகள் இலங்கையிலே தக்ஷிண (தென்) கைலாசம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் திருகோணமலையிலே மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலும் நிலவி வருவது குறிப்பிடற்பாலது. மேலும் இலங்கை முழுவதுமே தென்கைலாசம் என்ற கருத்துமுண்டு. வடதிசையிலுள்ள சட்டநாதர் ஆலயம் தமிழகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலுள்ள சீர்காழித் தொடர்புகளைக் காட்டுகின்றது. சைவ நாயன்மாரில் முதல்வரான திருஞானசம்பந்தரும் இசைஞானி முத்துத்தாண்டவரும், வேறு சில சைவ ஞானிகளும் பிறந்த சீர்காழியிலே இன்றும் சட்டநாதர் ஆலயம் தொடர்ந்து நிலவுகின்றது. எனவே, யாழ்ப்பாணச் சைவ மரபுகளிலே சீர்காழி மரபுகளும், ஏற்கெனவே குறிப்பிட்ட உப்பூர் மரபுகளும் நிலவுவது குறிப்பிடற்பாலது. மேற்கேயுள்ள தலங்காவல் பிள்ளையார் ஆலயமும் பெரும்பாலும் இக்காலத்திய தெனலாம். இப்பெயரில் அவர் காவல் தெய்வம் எனும் கருத்துப் புலப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ்மன்னரான பரராசசேகரன், செகராசசேகரன், அரசகேசரி முதலிய மன்னர்களின் பெயர்களைத் தாங்கி நிற்கும் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார், இணுவில் செகராச சேகரப்பிள்ளையார், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில்கள் குறிப்பிடற்பாலன. மேற்குறிப்பிட்டோர் காலங்களில் அல்லது அவர்கள் இறந்த பின் இவை அமைக்கப்பட்டிருக்கலாம். எனவே, பழைமையுடையனவாயிருக்கலாம். இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்திலே சமீபத்திலே பெரிய பஞ்சமுகவிநாயகர் சிலையும் உருவாக்கப்பட்டுள்ளது.

விநாயகர் பற்றிய பல்வேறு கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையிலான பெயர்களை அடுத்ததாகக் கவனிக்கலாம். 'கணபதி' என்பது சிவகணங்களுக்குத் தலைவராக அவர் விளங்குதலைக் குறிக்கும். கணங்களுக்குப் பெரிய தலைவராகத் மகாகணபதியாக விளங்குகிறார். இத்துடன் நின்றுவிடாது சிவகுடும்பத்தின் செல்வக்குமாரனாக, செல்லப்பிள்ளையாக மட்டுமன்றி அன்பர் அனைவருமேத்தும் செல்வமாகவும் செல்லப் பிள்ளையாகவும் இவர் மிளிர்கிறார். இவ் வகைகளில் சிறப்பிட்டி செல்லப் பிள்ளையார் கோவிலைக் குறிப்பிடலாம். இறைவனை அடியவர்கள் பிள்ளையாகவும் பாவனை செய்து வந்துள்ளனர். எனவே இக் கருத்துக்களைப் புலப்படுத்தும் கணபதிப் பிள்ளையார் கோவில்கள் சித்தங்கேணி, அனலைதீவு முதலிய இடங்களிலும், மகா கணபதிப் பிள்ளையார் கோவில்கள் கோண்டாவில், அராலி, வேலணை முதலிய இடங்களிலும் உள்ளன. சின்னப் பிள்ளையார் எனும் பெயரிலான கோவில் பருத்தித்துறையில் உள்ளது. பரந்தனிலே இறைகணபதிப்பிள்ளையார் ஆலயமுண்டு.

இறைவனின், சிவபிரானின் மூத்த திருக்குமாரனான இவர் மூத்தநயினார் எனவும் அழைக்கப்படுவர். இப்பெயரில் இவர் அமைந்துள்ள தலம் மூத்தநயினார் புலம் ஆகும். இப்பெயரிலான கோவில்கள் புங்குடுதீவு, அனைக்கோட்டை, கரணவாய், நல்லூர் முதலிய இடங்களிலுள்ளன. இப்பெயரிலான கோவில்களும் பழைமை வாய்ந்தனவாயிருக்கலாம்.

பிள்ளையார் சித்திகளைச் செய்பவர்; தொழில் இடையூறு இன்றி நிறைவேறும் பலன்களைத் தருபவர். அவருடைய சக்திகளிலொருவர் இப்பெயர் உடையவர். எனவே, தமது அருட்சக்தி மூலம் அன்பர்கள் வேண்டும் வரங்களை நிறைவேற்றுவார். எனவே, சித்திவிநாயகர், வரசித்திவிநாயகர் எனும் பெயர்களைத் தாங்கி நிற்கும் பல கோவில்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன. சித்திவிநாயகர் ஆலயங்களுக்கு எடுத்துக்காட்டாக, பருத்தித்துறை, புத்தூர், புலோலி, புன்னாலைக்கட்டுவன், நாவற்குழி, கொக்குவில், நெடுந்தீவு முதலிய இடங்களிலுள்ள கோவில்களையும், வரசித்திவிநாயர் ஆலயத்திற்கு எடுத்துக்காட்டாகப் புங்குடுதீவிலுள்ள கோவிலையும் குறிப்பிடலாம். இவற்றுட் சில பழைமை வாய்ந்தவை.

இறைவனைக் கற்பக விருக்ஷமாக, கனியாக அன்பர் நோக்கியுள்ளனர். திருவிசைப்பா ஆசிரியர் "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே" எனச் சிவபிரானைக் குறிப்பிட்டுள்ளார். கற்பகமரம் வேண்டுவன எல்லாவற்றையும் வாரி வழங்கும்; அவ்வாறே இறைவனையும், இங்கு விநாயகப் பெருமானையும் அன்பர் நோக்கியுள்ளனர்; நோக்குவர். எனவே, இக் கருத்தினைப் புலப்படுத்தும் வகையிலான கற்பகப் பிள்ளையார் ஆலயங்கள் நல்லூர், குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழான், கோப்பாய், உரும்பராய், காரைநகர், வட்டுக்கோட்டை, வண்ணார்பண்ணை முதலிய பல இடங்களில் உள்ளன. இக்கோவில்களிலும் சிலவாயினும் பழமை வாய்ந்தன வாயிருக்கலாம்.

பிள்ளையார் இடையூறுகளின் தலைவரும், நீக்குபவருமாகையால் விக்னேஸ்வரன் ஆவர். இடையூறுகளை நீக்கி வரம் தருபவராதலால் வரதவிக்னேஸ்வரன் ஆகிறார். தெய்வங்களின் திருக்கரங்களில் பொதுவாக ஒன்று "உலகத் துன்பங்களுக்குப் பயப்படாதே; நான் இருக்கிறேன்; அஞ்சத் தேவையில்லை" என்பதை ஆன்மாக்களுக்குப் புலப்படுத்தும் அபயகரமாகும். அன்பர்கள் வேண்டுவனவற்றை உவந்தளிக்கும் "வரதகரம்" மற்றையதாகும். பிள்ளையார் இடையூறுகளின் தலைவர் எனும் கருத்தினைக் குறிக்கும் விக்னேஸ்வர ஆலயங்கள் தொண்டைமானாறு, மயிலிட்டி முதலிய இடங்களிலும், "ஸ்ரீவரதவிக்னேஸ்வர" ஆலயம் ஆனைக்கோட்டையிலும் உள்ளன.

பிள்ளையாரின் அளப்பரும் கருணையினைக் காட்டும் வகையிலான கருணாகரப் பிள்ளையார் ஆலயங்கள் உரும்பராய், ஏழாலை முதலிய இடங்களில் உள்ளன. இவற்றிலே, உரும்பராயிலுள்ள ஆலயம் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான ஆலயம் என்பது அங்கு கிடைத்துள்ள கி. பி. 16ஆம், 17ஆம் நூற்றாண்டுத் தொடக்க காலங்களைச் சேர்ந்த இரு தமிழ்க் கல்வெட்டுகளாலும் புலப்படுத்தப் படுகின்றது.

விநாயகருடன் தொடர்பான புராணக்கதைகளையும், வேறுசிலவற்றையும் பிரதிபலிக்கும் பெயர்களிலுள்ள சில ஆலயங்கள் குறிப்பிடற்பாலன. 'வீர' எனும் அசுரனை அழித்து உலகினை அவர் காப்பாற்றியமையால் 'வீரகத்தி' விநாயகர் ஆனார்; இப்பெயரிலான ஆலயங்கள், வண்ணார்பண்ணை, உடுப்பிட்டி, திருநெல்வேலி, மறவன்புலோ, புங்குடுதீவு, நயினாதீவு முதலிய பல இடங்களில் உள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள வில்லூன்றி விநாயகர் ஆலயம் இராமாயணக் கதையுடன் தொடர்புள்ளதாகக் கூறப்படுகின்றது. வண்ணார்பண்ணை [illegible]க் கோட்டு விநாயகர், இயக்கச்சி வள்ளி வரதவிநாயகர், வேலணை கவிடுகின்னிப் பிள்ளையார், காரைநகர் வான்மிகப் பிள்ளையார், அன்னாலை வில்லியனந்தப் பிள்ளையார் முதலிய சில ஆலயங்களும் சில பழைய கதைகளைப் புலப்படுத்தும் வகையின.

இறைவனை விலைமதிக்கவொண்ணா மணியென அன்பர் கருதுவர். உலகிலே கேட்பன வற்றை அளிப்பது சிந்தாமணி இதைவிட மாணிக்கமும் முத்தும் போன்ற மணிகளும் கவனிக்கற்பாலன. சிந்தாமணி விநாயகர் ஆலயங்கள் நவாலி, கல்வியங்காடு, அல்லைப்பிட்டி முதலிய இடங்களிலும், மாணிக்கவிநாயகர் ஆலயம் ஏழாலையிலுமுள்ளன. முத்துவிநாயகர் ஆலயங்கள் புளியங்கூடல், வண்ணார்பண்ணை போன்றவிடங்களிலுள்ளன.

தந்தையாராகிய சிவபிரானுக்குரிய முக்கியமான அம்சங்களும் இவரிடத்துள்ளன. சிவபிரானே கஜமுகாசுரனை அழித்தற்காக விநாயக வடிவம் தாங்கினார் என்று கூறப்படுகின்றது. ஒரே இறைவன் பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுதற்குப் பற்பல திருவடிவங்கள் தாங்கியுள்ளார். சிவபிரானைப் போலவே விநாயகரும் சிவஞானவடிவினர், சிவஞானச் செல்வர். சிவஞானப் பிள்ளையார் கோவில்கள் உடுவில், சங்குவேலி, நல்லூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. சிவபிரானையே சிறப்பாகக் குறிக்கும் ஈஸ்வரன் எனும் பெயரிலே பறாளையில் ஈசுர விநாயகர் ஆலயம் உள்ளது. இதுபோலவே, மகாதேவ எனும் பதமும் சிவபிரானையே சிறப்பாகக் குறிக்கும். இப்பெயரிலே மகாதேவப் பிள்ளையார் ஆலயம் சங்கானையில் உள்ளது. சிவபிரானைப் போலவே, பிள்ளையாரும் இளம்பிறையைத் திருமுடியிலே தரித்துள்ளார். இவ்வகையால் அவரும் சந்திரசேகரப் பிள்ளையார் ஆகிவிட்டார். சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயங்கள் நல்லூர், சுன்னாகம் முதலிய இடங்களில் உள்ளன. சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான் நடராஜனாக விளங்குபவர். இவரைப் போலவே பிள்ளையாரும் நர்த்தன கணபதியாக மிளிர்கிறார். வீரசக்தி விநாயகராகவும், நர்த்தனகணபதியாகவும் ஓரிடத்திலே அத்தியடியிலே வீரசக்தி நடராஜப் பிள்ளையாராகவும் இவர் விளங்குகிறார். கொண்டாவிலில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் உள்ளது. நர்த்தனகணபதிவடிவம் குறிப்பிடற்பாலது. சிவபிரான் லிங்க வடிவினர். இச்சிற்றம்பலத்தில் உறைபவர். இக்கருத்துக்கள் விநாயகருக்கும் கூறப்பட்டுள்ளன. இவற்றைப் புலப்படுத்தும் வண்ணார்பண்ணை சிவலிங்கப்பிள்ளையார் ஆலயம், பன்றிக்கோட்டு சிவலிங்கவிநாயகர் ஆலயம், வல்வெட்டித்துறை வேடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயம் முதலியன குறிப்பிடற்பாலன. தென்மராட்சியிலே உள்ள தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம் தனிரகமானது. அன்பர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் வகையில் மாடுகளைக் கொண்டுவந்து இங்கே கட்டவிழ்த்து விடுவர். மேலும் ஆலய முறையிலான வழிபாடு இங்கு நடைபெறுவதில்லை.

பிள்ளையார் செழிப்பு, வேளாண்மை ஆகியனவற்றிற்குரிய தெய்வமாகவும் கொள்ளப்படுகின்றார். யானைமதம் பொழிதல், பிள்ளையாருக்கு மோதகத்திலுள்ள விருப்பம், வேளாண்மைத் தொடக்கத்திலும் முடிவிலும் அவரை விவசாயிகள் வழிபடுதல், வேளாண்மையை நாசமாக்கும் எலியினைக் கட்டுப்படுத்தி வாகனமாகக் கொண்டிருத்தல், மேற்குறிப்பிட்டவாறு மாடுகளைக் கட்டவிழ்த்துவிடல் போன்றவை இக்கருத்துக்களைப் புலப்படுத்துவன எனலாம்.

இறைவன் அருள் எனும் ஆனந்தவடிவுடையர், அந்த ஆனந்தத்தினை அன்பருக்கு அளித்து அவர்களின் ஆன்ம ஈடேற்றத்தினை ஏற்படுத்துவர். இக்கருத்தினைப் புலப்படுத்தும் அருளானந்தப் பிள்ளையார் ஆலயம் கந்தரோடையில் உள்ளது.

உலோகங்களிலே விலைமிக்கதும் சிறந்ததுமான பொன்னாகவும் இறைவனை அன்பர் அமைத்துள்ளனர். உடுவிலில் அருள்மிகு சொர்ண(பொன்) விநாயகர் ஆலயம் உள்ளது. ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, அருட்செல்வமாகவும், பொருட் செல்வமாகவுமிவர் செல்வ விநாயகராகச் சாவகச்சேரி, மயிலிட்டி போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் அழைக்கப்படுகிறார். கொய்யாத்தோட்டத்திலே ஞானசெல்வவிநாயகராகவும் ஆனைக்கோட்டையிலே "மிக மேம்பாடுடைய" எனப் பொருள்படும் உத்துங்க விநாயகராகவும் இவர் இலங்குகிறார். குமாரப்பிள்ளையார் ஆலயமும் உலகப்பிள்ளையார் ஆலயமும் முல்லைத்தீவிலுள்ளன.

இந்தியாவிலுள்ள சில திருத்தலங்களின் பெயர்களைத் தாங்கி நிற்கும் சில ஆலயங்கள் உள்ளன. இவ்விடங்களிலிருந்து பிள்ளையார் சிலைகள் கொண்டுவரப்பட்ட காரணத்தினாலோ அல்லது பிறகாரணத்தினாலோ இப்பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஏற்கெனவே குறிப்பிட்ட வெயிலுகந்த பிள்ளையார், மண்டைதீவு திருவெண்காடுவிநாயகர், தெல்லிப்பழை காசிவிநாயகர், காங்கேசன்துறையிலுள்ள காசா (காயா) த்துறைப் பிள்ளையார், சரசாலை சிதம்பரவிநாயகர் கோவில்கள் முதலியன குறிப்பிடற்பாலன.

இவ்வாறு பல திறப்பட்ட செழுமையான குறிப்பிடத்தக்க கருத்துக்களைப் புலப்படுத்தும் வகையில் விநாயகப் பெருமானின் பல நாமங்களில் அமைந்துள்ள ஆலயங்கள் நன்கு குறிப்பிடற்பாலன. மேற்குறிப்பிட்ட கோவில்கள் முன் குறிப்பிட்டவாறு பல்வேறு காலத்தவை. இவற்றுள்ளே பழைமை வாய்ந்த கோவில்களும் உள்ளன என்பதும் தெளிவு. மேலும் இங்கே கூறப்பட்டுள்ள பெயர்களின் அடிப்படையிலே நோக்கும் போது இடப்பெயர்கள், விருட்சப் பெயர்களால் அழைக்கப்படுவன மட்டுமன்றி, சித்திவிநாயகர், கற்பகப்பிள்ளையார், வீரசக்தி விநாயகர், மூத்தவிநாயகர், சிவஞானப்பிள்ளையார் எனும் பெயரிலுள்ள ஆலயங்களும் பல காணப்படுகின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டவாறு போர்த்துக்கீசரின் நடவடிக்கைகளாலே பழைய கோவில்கள் முற்றாக அழிந்துவிட்டன. யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கீசர் சார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
250263

பில் கி. பி 1619 இல் அடிப்படுத்திய பிலிப் டி ஒலிவீரா எனும் தளபதி ஐந்நூறு இந்துக் கோவில்களை அழித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இத்தொகையினை அப்படியே ஏற்றுக் கொள்ளாவிடினும், பல கோவில்கள் அழிக்கப்பட்டுள்ளமையினையும், அவற்றிலே விநாயகர் ஆலயங்களும் இடம் பெற்றிருப்பன என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியிலும் (18 ஆம் நூ.) பிரித்தானியர் ஆட்சியின் போதும் (1796 – 1948), மதசுதந்திரம் வழங்கப்பட்டபோது, முன்னர் அழிக்கப்பட்ட பல கோவில்கள் திரும்பவும், அவ்வவ்விடங்களிலோ அயலிலோ அமைக்கப்பட்டன. அவற்றை விடப் புதிய ஆலயங்களும் நிறுவப்பட்டு வந்தன. சிறிய ஆலயங்கள் விரிவுற்று வந்தன. இப்போக்குத் தொடர்ந்து இக்காலத்திலும் நிலவுகின்றது. சமீபகாலத்திலே ஆகமமரபிலான கோவில்களின் தொகை அதிகரித்து வருவது குறிப்பிடற்பாலது.

ஏற்கெனவே குறிப்பிட்டவிநாயகர் ஆலயங்களை விட, ஓரளவு பெரிய, சிறிய கோவில்கள் பல உள்ளன என்பதும் ஈண்டுக் கவனித்தற்பாலது. இவற்றை விட ஏனைய இந்து சமயத் தெய்வங்களுக்கான கோவில்களிலே விநாயகர் பரிவார தெய்வமாக அமர்ந்து அருள் புரிகின்றார். அவரைப் பலர் தங்களுடைய இஷ்ட தெய்வமாவும் வணங்குவர்.

இலங்கையிலே விநாயக வழிபாட்டினைச் சிறப்பிக்கும் சில நூல்கள் தமிழிலே எழுதப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, வரதபண்டிதர் எழுதிய விநாயகர் அகவல், சின்னத்தம்பிப் புலவரின் பறாளை விநாயகர் பள்ளு முதலியனவற்றைக் குறிப்பிடலாம் அவ்வவ்விடங்களில் உள்ள விநாயகர் பெயரிலே பிரபந்தங்கள். குறிப்பாகத் திருப்பதிகங்கள், ஊஞ்சல்கள் முதலியனவும் பரவலாக எழுதப்பட்டு வந்துள்ளன.

ஆண்டுதோறும் பல விநாயகர் ஆலயங்களிலே மஹோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. மாதங்கள் தோறும் சதுர்த்தி விரதம் குறிப்பாக ஆவணி மாதச் சதுர்த்தி விரதம் பரவலாக விநாயகர் ஆலயங்களில் மட்டுமன்றிப் பிற சைவாலயங்களிலும் அனுஷ்டிக்கப்படுகின்றன. பல ஆலயங்களிலே ஆவணிச் சதுர்த்தி பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இதனைவிட, விநாயக சஷ்டி விரதம் 21 நாட்களுக்கு கார்த்திகை – மார்கழி மாதங்களிலே பல கோவில்களிலே கடைப்பிடிக்கப்படுகின்றது. இவ்விரத காலங்களிலே விநாயகருக்கான அகவல்களும், விநாயகபுராணம் முதலியனவும் ஓதப்படுகின்றன. விநாயகருக்கான அஷ்டடோத்தர (108), சஹஸ்ரநாம (1000) அர்ச்சனைகளும் இடம் பெறுகின்றன. சில கோவில்களிலே லக்ஷார்ச்சனையுமிடம் பெறுகின்றது.

விநாயகருக்கான பல்வேறு திருவுருவங்கள் பற்றி ஆகமங்களும், சிற்பநூல்களும், வேறு சில நூல்களும் கூறுகின்றன. இவற்றிலே 16, 32, 64 எனப் பல திருவுருவங்கள் உள்ளன. சங்கரத்தையிலுள்ள விநாயகர் ஆலயத்திலே விநாயகரின் பதினாறு (ஷோடஷ) மூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ளன. அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்திலே பிள்ளையாரின் பல வடிவங்களைச் சித்திரிக்கும் ஓவியங்கள் உள்ளன. சில ஆலயங்களிலே பஞ்சமுகவிநாயகர் சிலைகளும் உள்ளன. ஆலயங்களின் ஸ்தூபிகள், கோபுரங்கள் முதலியவற்றிலே பிள்ளையார் பற்றிய புராணக்கதைகள் பல சிற்பங்களிலே கூறப்பட்டுள்ளன.

எனவே, இதுவரை கூறப்பட்டுள்ளனவற்றைத் தொகுத்து நோக்கும் போது யாழ்ப்பாணக் குடநாட்டிலுள்ள பழைமையான வழிபாடுகளிலொன்றாகவும், பரவலாக நிலவும் வழிபாடுகளிலொன்றாகவும் தமிழர் பலரின் வாழ்க்கையில் ஒன்றிணைந்த வழிபாடுகளில் ஒன்றாகவும் விநாயகர் வழிபாடு நிலவி வருவது தெளிவு. இலங்கையின் ஏனைய இடங்களிலும் பார்க்க இங்குதான் கூடுதலான பெரிய ஆலயங்கள் விநாயகருக்கு உள்ளன. மேலும் இங்கு நிலவும் விநாயகர் வழிபாட்டிலே சைவசமயத்தின் ஏனைய தெய்வங்கள் பற்றிய கருத்துக்கள் ஓரளவு இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடற்பாலது. இந்து சமயக்கிரியைகள், பிறநிகழ்வுகள் பலவற்றிலும் முதலிடம் பெறுவதாலும், வழிபாட்டின் எளிமையாலும், கல்வி, செல்வம், விவசாயம், ஞானம் முதலிய பல திறப்பட்ட நோக்கங்களையும் நிறைவேற்றவல்லதாகவும், சமூகத்தின் பல்வேறு மட்டத்தினரையும் கவரத்தக்க ஒன்றாகவும் விளங்குவதாலும், அன்புள்ள சாந்தமான தெய்வமூர்த்தியின் வழிபாடாக மிளிர்வதாலும், இன்னோரன்ன வேறு சில காரணங்களாலும் இவ்வழிபாடு நன்கு பரவலாக நிலவுகின்ற தெனலாம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார்கட்டும் அதன் பண்பாட்டுத் தொன்மையும் சில குறிப்புக்கள்

செ. கிருஷ்ணராசா, எம். ஏ.,
முதுநிலை விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்தில் பண்பாட்டு ஆய்வுகளுக்கு இன்று முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. கோயில்களை மையமாகக்கொண்ட பண்பாட்டு ஆய்வுக்களங்கள் யாழ்ப்பாண வரலாற்றுக்கு அடிப்படைத் தகவல்களை வழங்குபவையாகக் காணப்படுகின்றன. இக்காரணத்தினால் தலவரலாறு பற்றிய ஆய்வுகள் இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தில் பெரிதும் வரவேற்பினைப் பெறுகின்றன. இப்பின்னணியில் நாயன்மார்கட்டுப் பகுதியில் அமைந்து காணப்படும் வெயிலுகந்த பிள்ளையார் தலவரலாறும் அதன் சுற்றாடலில் இருந்து கிடைக்கப் பெறும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த சான்றுகளும் இச்சிறு கட்டுரைக்கான அடிப்படைத் தகவல்களாகின்றன.

நாயன்மார்கட்டுப் பிராந்தியமானது வரலாற்றுத் தொன்மைமிக்க சங்கிலியன் தோப்பு, இராஜகுமாரன் வளவு, யமுனாரி, கிறித்தவ தேவாலயம் ஆகியன அமைந்திருக்கும் நிலப்பரப்புக்கு நேர் கிழக்கே அமைந்திருப்பதனைக் காணலாம். திட்டவட்டமாக நாயன்மார்கட்டு எல்லைகளை வரையறுப்பதில் சிக்கல்கள் இருந்தாலும், இப்பரப்பிற்கு வடபால் கோட்டைவாசல் கிராமமும், தென்திசையில் அரியாலையூரும், கிழக்குத் திசையில் காட்டுவாசல் என்றழைக்கப்படும் நிலப்பரப்பும், உப்பு விளையும் வயற்பரப்பும் எல்லைகளாக அமைந்திருப்பதனைக் காணலாம்.

உப்புமடம் பிள்ளையார் என அழைக்கப்படும் ''பரராசசேகரப் பிள்ளையார்'' கோயிலுடன் நாயன்மார்கட்டுத் தொடர்புகள் யாழ்பாணத்தரசர்கள் காலத்தில் இருந்தனவா என்பது தற்பொழுது ஆராயப்படவேண்டிய ஒரு விடயமாகின்றது. ஒல்லாந்தர் காலப் பகுதியில் செம்மணி வயற்பரப்பில் விளைந்த உப்பு, வியாபார நோக்கத்திற்காக உப்புமடத்திற்கு (கோண்டாவில் - மேற்கு) எடுத்துச் செல்லப்பட்டதற்கான ஐதீகம் இன்றுவரைக்கும் அப்பிராந்தியத்தில் நிலவிக் கொண்டிருப்பதனைக் காணலாம். இவற்றைவிட உப்புமடம் பாராசசேகரப் பிள்ளையார் கோயிலுக்குரியது என்று சொல்லப்படும் நான்கு சைவ நாயன்மார்களது வெண்கலத் திருவுருவங்களும் நாயன்மார்கட்டுப் பிராந்தியத்திலேயே வார்க்கப்பட்டவை என்ற மரபும் இங்கு வழங்கப்படுவதனைக் காணலாம் இந்த நான்கு சைவ நாயன்மார்களது வெண்கலத் திருவுருவங்களும் மதுரை நாயக்கர்கால முடி அலங்காரங்களையும், ஆடை ஆபரணங்களையும், தாமரைப் பீடங்களையும் கொண்டு விளங்குவதனைக் காணலாம். இந்த அம்சங்கள் தொடர்ந்தும் ஆராயப்பட வேண்டியவை ஆகின்றன.

தற்போதைய நிலையில் நாயன்மார்கட்டுப் பிராந்தியமானது பண்பாட்டடிப்படையிலான அதன் ஆய்வின் அவசியத்தினை உணர்த்தி நிற்பதற்கான காரணங்கள் பலவாகும். அவையாவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக் கோயிலாகக் குறிப்பிடப்படும் வெயிலுகந்த பிள்ளையார் கோயில் நாயன்மார்கட்டுக்குள் அமைந்துள்ளமை.

2. மடத்து வாயில் அல்லது மடத்து வளவு எனக் குறிப்பிடப்படும் அறுபத்து மூவர் குருபூசை மடம் அமைந்து காணப்பட்ட மையம்.

3. ''சரஸ்வதி மஹால்'' என்று குறிப்பிடப்படுகின்ற புராதன நூலகம் அல்லது மத்திய கால நூலகம் ஒன்று இங்கு அமைந்திருந்தது பற்றிய மரபு.

4. கோட்டை வாயில் கிராமத்தின் பண்பாட்டுத் தொன்மை.

5. புராதனம் வாய்ந்த நாயன்மார்கட்டுச் சித்தவைத்திய மரபும், தமிழ்க் கல்விப்பாரம் பரியமும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து பிரதானமான அம்சங்களின் அடிப்படையிலே நாயன் மார்கட்டின் பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவத்தினைப் பற்றிய சில குறிப்புக்களை இங்கு நோக்கலாம்.

நாயன்மார்கட்டுப் பகுதியில் அமைந்து காணப்படுகின்ற வெயிலுகந்த பிள்ளையார் கோயில் தொடர்பான மரபுகள் அப்பிராந்தியத்தினை வரலாற்றுத் தொன்மையுடைய தாகக் கொள்ளவைக்கின்றன. யாழ்ப்பாண வைபவமாலையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக் கோயில்களுள் ஒன்றாக வெயிலுகந்த பிள்ளையார் கோயில் குறிப்பிடப்பட்டுள்ள மையைக் காணலாம். யாழ்ப்பாண வைபவம் அல்லது யாழ்ப்பாண வைபவமாலை எழுதப் பட்ட போது (கி. பி. 18 ஆம் நூ.) அக்குறிப்பிட்ட ஆலயத்திற்கு வழங்கப்பட்டுக் கொண்டி ருந்த நாமம் அக்கோயிலின் தோற்றக் காலத்திலும் (ஏறக்காழ கி. பி. 13 அம் நூற்றாண்டு) வழங்கப்பட்டிருந்ததா என்ற ஒரு பிரச்சினை எமக்கு எழுகின்றது. வெயிலுகந்த பிள்ளையார் கோயிலுக்கு அதன் ஸ்தாபித காலத்தில் சூட்டப்பட்ட பெயர்தான் கி. பி. 18 ஆம் நூற்றாண் டிற்குப் பிறகும் தொடர்ந்து வழக்கில் இருந்து வந்தது என்பதனை நிரூபிப்பதற்கு எமக்கு எந்தவிதமான தொல்லியற் சான்றுகளும் கிடைக்கவில்லை. இந்நிலையில் அக்கோயிலினது பெயர்த்தோற்றம் தொடர்பாகவும், அக்கோயிலினது தொன்மையை ருசுப்படுத்தும் சான்று கள் தொடர்பாகவும் கருத்து வேறுபாடுகள் நிலவுவதனைக் காணலாம்.

''வெயிலுகந்த பிள்ளையார்'' என்ற பெயர்த் தோற்றம் தொடர்பாக இப்பிராந்தியத் தில் நின்று நிலவும் ஓர் ஐதிகத்தினையும் நாம் நோக்குதல் வேண்டும். 'கரிய மழையிருளில், மழை பெய்து கொண்டிருக்கும் போது கூடச் சூரியனுடைய கதிர்களில் ஒரு கற்றை இப் பிள்ளையார் மீது விழுந்து பரவிக் கொண்டிருந்தது' என்ற காரணத்தினால் ''வெயில் உகந்த'' என்ற அடை மொழி உருவாயிற்று என்றும் எடுத்துக்காட்டுவர். சூரியனுடைய தரிசனம் எந்நேரத்திலும் கிடைக்ககூடியதான கிராதிக் கோயிலாக இப்பிள்ளையாருடைய மூலஸ்தானம் அமைந்திருந்தமையால் ''வெயிலுகந்த பிள்ளையார்'' என்ற காரணப்பெயர் ஏற்பட்டது என்றும் எடுத்துக் காட்டுவர். ஆனால் இப்பிராந்தியத்தில் மேற்கொண்ட இடப்பெயர் பற்றிய வரிசையில் மடத்து 'வாசல்', கோட்டை 'வாசல்', காட்டு 'வாசல்' என்பன தனித்துவமான பண்பாட்டுக் குறிகாட்டிகளாக விளங்குவதனைக் காணலாம். அவ் வாறாயின் இப்பிள்ளையாருக்குரிய காரணப் பெயர் 'வாசல் உகந்த' பிள்ளையார் என்றி ருந்திருக்குமோ எனவும் ஒருவருக்கு ஐயுறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். 'வாசல் உகந்த' பிள்ளையார் என்ற பிரயோகமே காலப் போக்கில் மருவிச் சென்று 'வாசல்' என்பது வாயிலாகி, பின்னர் 'வெயிலாக' மருவியது என்று கொள்ளின் அது மொழியியல் வழக்காற் றில் தவறில்லை எனக்குறிப்பிடலாம். அந்நிலையில் 'வாசல் உகந்த பிள்ளையார்' அன்று யாழ்ப்பாண நகரியின் காவல் தெய்வமாகப் பதிட்டானம் செய்யப்பட்டிருந்தது என்பதனை நிலைநிறுத்திக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாசல் உகந்த' பிள்ளையார் கோயிலின் வரலாற்றுத் தொன்மையை நிலைநிறுத்துவதற்கு எவ்விதமான தொல்லியற் சான்றுகளும் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. இதனைவிட, அன்று 'வாசல் உகந்த' பிள்ளையார் பதிட்டம் செய்யபட்ட இடத்திற்றான் இன்றும் காணப்படுகின்றது என்பதும் எமக்குத் தெளிவில்லை. ஏனெனில் திருநெல்வேலி கிழக்கில் அமைந்து காணப்படும் 'மேற்கு வாசல்' பிள்ளையார் கோயிலின் 'வாசல்' என்ற பதம் ஒருவேளை அரண்மனை வாசலைக் குறித்து நிற்கும் பட்சத்தில், 'வாசல் உகந்த' பிள்ளையார் கோயிலின் பழைய அமைவிடம் தற்போதைய நிலையிலிருந்து வேறுபட்டதாகத்தான் அமைந்திருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றும். அதனை 'மேற்கு வாசல்' பிள்ளையார் கோயிலின் வரலாற்றுத் தொன்மையினையும் மரபினையும் மையமாகக் கொண்டே பின்னர் தீர்மானிக்க வேண்டியவர்களாவோம்.

நாயன்மார்கட்டுப் பிராந்தியத்தின் பண்பாட்டுத் தொன்மையில் மடத்து வளவு அல்லது மடத்து வாசல் எனக் குறிப்பிடப்படும் பகுதி மிகப் பிரதானமானது ஆகும். இராசகுமாரன் வளவிற்கு நேர் கிழக்கே நாயன்மார்கட்டுக் கிருக்குளத்திற்கு வடபுறத்தே, அதன் அருகாமையில் அமைந்துள்ள நிலப்பரப்பே 'மடத்து வளவு' அல்லது 'மடத்து வாசல்' என அழைக்கப்படுவதனைக் காணலாம். இங்கு அறுபத்துமூவர் குருபூசை மடம் இருந்ததாக மரபுகள் எடுத்துக் காட்டுகின்றன. இக் குருபூசைமடத்துடன் இணைந்த வகையிலேயே 'சரஸ்வதி மஹால்' என்று அழைக்கப்பட்ட பாகான நூலகமொன்று நாயன்மார்கட்டில் அமைந்திருந்தது என்பதும் மரபுகள் வாயிலாக அறிந்து கொள்ளமுடியும் விடயமாகும். 'நாயன்மார்கட்டு' என்ற இடப்பெயர் தோற்றம் பெற்றுப் பிரபல்யம் அடைவதற்கு குருபூசை மடமும் அதன் அருகிற் காணப்பட்ட நாயன்மார்கட்டுத் திருக்குளமும் பெரிதும் உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை. நாயன்மார்கட்டுக் திருக்குளத்தின் மையப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட ஒரு கல்வெட்டுத் தொடர்பாகப் பல கருத்துக்கள் நிலவினாலும் கூட அதனை ஒரு கற்பதிவு என்ற ரீதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மேலதிக தரவினைக் கொடுக்கும் ஒரு சான்றாகக் கொள்ளமுடியும். 'சிங்கையாரியனால் அமைக்கப் பெற்றது' என்று முடிவடையும் இச்சாசனத்தின் வரிவடிவ அமைப்பினை, கி. பி. 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளுக்குரியதாகக் கொள்ளமுடியும்.

நாயன்மார்கட்டுப் பிராந்தியம் ஒரு 'கல்விக் கோட்டமாகப்' புராதன காலத்தில் விளங்கியிருந்திருக்க வேண்டும் என்பதனையும் எழுத்தறிவு, நூலறிவு இரண்டும் ஒருங்கே கைவரப் பெற்ற ஒரு மையமாகவும் வளர்ச்சியடைந்திருக்கவேண்டும் என்பதனையும் இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் முதலாய்வுகளின் போது கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. நாயன்மார்கட்டுச் சித்த வைத்தியசாலைக்குரிய புராதனம் வாய்ந்த கிணற்றின் படிக்கட்டுக்குக் கீழ்ப் பகுதியில் ஒரு நீண்ட சாசனம் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றது. (தற்போது அக்கிணறு மூடிக்கட்டப் பெற்றுள்ளமை காரணமாக அச்சாசனத்தினை வாசிக்க முடியாதுள்ளது.) பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல் ஒன்றின்படி இந்த வைத்தியசாலையானது திண்ணைப் பள்ளிக்கூடத்துடன் இணைந்த வகையில் கி. பி. 1850 இல் அல்லது அதற்கும் முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது என்பது வெளிப்படையாகின்றது. இந்த வைத்தியசாலையுடன் இணைந்த நூலகமான 'சரஸ்வதி மஹால்' நாயன்மார்கட்டுத் திருக்குளத்தின் அருகில் அமைக்கப்பட்டிருந்தது எனவும் கூறப்படுகிறது. 'இரகு வம்சம்' என்ற வடமொழிக் காவியம் தமிழில் பாடப்பட்ட அல்லது மொழி பெயர்க்கப்பட்ட நிகழ்வு இங்கேயே ஒப்பேறியது என்பது அறிஞர் பலரதும் கருத்தாகும். மத்திய காலச் சோழ நாட்டில் 'சரஸ்வதி பண்டாரங்கள்' என்று பல நூலகர்களும் நூலகங்களும் மக்களுக்குத் தொண்டாற்றிய செய்திகளைச் சாசனங்கள் வாயிலாக அறிகின்றோம். அவ்வகையில் நாயன்மார்கட்டில் அமைந்திருந்த 'சரஸ்வதி மஹால்' எமது பாரம்பரிய நூலக மரபின் வடிவமாக திறுவனமாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இது மேலும் ஆராயப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய ஒரு விடயமுமாகும். அகழ்வாய்வு மூலம் இந்தப் புராதன நிறுவனத்தின் புதைந்த சான்றுகளை வெளிக் கொணர வேண்டியதும் அவசியமாகும்.

நாயன்மார்கட்டுப் பிராந்தியத்தின் பண்பாட்டுப் புதையல்களைத் தேடிச் சென்ற பொழுது எமக்குக் கிடைத்த பல தகவல்கள் கோட்டைவாசல் கிராமத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டி நின்றன. அதுவே எம்மை மேலும் மேலும் இப்பிராந்திய ஆய்வு தொடர்பாக ஈடுபடுவதற்கு ஊக்கமளித்தது. அதன் விளைவாகப் பண்பாட்டு ரீதியானதும் சமூகரீதியானதுமான பல விடயங்களைக் கோட்டை வாசல் கிராம வாழ்வின் பின்னணியிலிருந்து மீட்க முடிந்தது. எதிர்காலத்தில் அவை எமது சமூக மானிடவியலாளர்களுக்கும் உதவும் வரலாற்று மூலங்களாகலாம்.

கோட்டை வாசல் கிராம மக்களிடையே நாகவழிபாடு மிகவும் ஆழமான இடத்தினைப் பெற்றுக் கொண்டிருப்பதனைக் காணலாம். ஆதிகாலம் தொட்டு இம்மக்கள் தத்தமது இல்லங்களருகே அமைத்துள்ள கிணற்றினுள்ளும், வழிபாட்டிடங்களிலும் நாக வணக்கத்தினை வெளிப்படுத்துமுகமாக நாகக் கற்களை வைத்து வழிபடும் முறையைப் பின்பற்றி வருகின்றமையைக் காணலாம். விசேடமாக, கிணற்றின் அடியில், நீரினுள் நாகத் தலை பொறித்த கற்களை வைத்து விடுகின்ற பண்பினையுடையவர்களாக இக்கிராம மக்கள் காணப்படுகின்றனர். தற்போதைய நிலையில் இப்பண்பு அருகிவந்தாலும் கூட இம்மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்ததற்கான ஆதாரங்கள் தற்போது கிடைத்துள்ளன. இவ்வாறு கிணற்று நீர்மட்டத்தின் கீழ் நாகக்கற்களை வைத்துவிடுகின்ற பண்பானது நீர் வற்றாமல் இருப்பதற்காகவும், மாசு அடையாமல் இருப்பதற்காகவும், வளத்தினை [Fertility] ஊட்டுவதற்காகவும் என அவ்வூர் மக்களால் நம்பப்பட்டது.

மேலும் கோட்டைவாசல் கிராம மக்களிடையே காணப்பட்ட தோம்பு முடிக்கும் முறையில் (உறுதியில்) நாக வடிவத்தினைப் புனித சின்னமாக வரையும் முறை காணப்பட்டிருந்தது என்பதனை அவதானிக்கும் பொழுது நாக வழிபாட்டின் மீது எத்தகைய நம்பிக்கையை அவர்கள் கொண்டிருந்தனர் என்பது நன்கு வெளிப்படையாகின்றது. இதற்கும் மேலாக இக்கிராம மக்கள் தாம் வளர்க்கும் பசுக்களுக்கு நாக வடிவத்தினையே குறியீடாகக் குறிசுட்டு வைப்பதனையும் நடைமுறையில் கண்டு கொள்ள முடிகின்றது. ஐந்து தலை நாக பாம்பின் வடிவமே குறியீடாகக் கொள்ளப்பட்டது என்றால் நாக வணக்கம் எந்தளவிற்குக் கோட்டை வாசல் கிராம மக்களிடையே ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதனை அறியலாம்.

நாக வணக்கம் கோட்டை வாசல் மக்களிடையே ஆழமாக வேரூன்றக் காரணமாக இருந்த ஓர் ஐதிகத்தினையும் இங்கு நோக்குவது பொருத்தமாகும்:
"முன்னொரு காலத்தில் இக்கிராமத்தில் ஒரு தாயின் வயிற்றில் பெண்குழந்தை ஒன்றுடன் நாகம் ஒன்றும் சேர்ந்து பிறந்ததாகவும், பின்னர் அந்நாகம் தனது போக்கில் எங்கோ சென்றுவிட்டதாகவும் எடுத்துக் கூறப்பட்டது. பின்னர் அக்குறிப்பிட்ட பெண்குழந்தை திருமண வயதடைந்ததும் அதற்கான முயற்சிகளில் பெற்றோர் ஈடுபட்டிருந்த போது முன்பு சென்று மறைந்த நாகம் மீண்டும் பெற்றோரிடம் சொத்தில் பங்கு கேட்டு வந்து நின்றதாம். உடனே அந்நாகத்தின் பெற்றோரும் அதற்குரிய பங்கினை உறுதியில் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுக்க அந்நாகம் அவ்வுறுதியை வாங்கிக் கொண்டு, சென்று மறைந்து விட்டதாம்."

இதனாலேயே இக்கிராம மக்கள் இன்றுவரை உறுதி எழுதும் பொழுதும் நாகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவத்தினை வரைந்ததன் பின்னரே உறுதி எழுதும் வழக்கமுடையோராகக் காணப்படு கின்றனர் என்று சொல்லப்படுகிறது. இப்பண்பாட்டம்சமானது மேலும் ஆராயத்தக்கதாகும்.

கோட்டை வாசல் கிராமத்தின் மையத்தில் 'கொழுந்துத் தோட்டம்' என்றழைக்கப் படும் வெற்றிலைத் தோட்டம் அமைந்து காணப்பட்டது எனக் கூறப்படுகின்றது. தோம்புப் பெயராகக் 'கொழுந்துத் தோட்டம்' என்பது காணப்படுவதிலிருந்து போர்த்துக்கீசர், ஒல் லாந்தர் காலப் பகுதிக்கு முன்னரிலிருந்தே இங்கு வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்ட மக்கள் வாழ்ந்திருந்தனர் எனக் கொள்ள முடியும். ஈழத்தில் வெற்றிலைச் செய்கையானது சோழர் ஆட்சிக்காலப் பகுதியிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது எனலாம். 'காவிரி வெற்றிலைச் செய்கை' சோழர்களாலே பரப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குச் சாசன ஆதாரங்கள் கிடைத் துள்ளன. 'அடைக்காய் அமுது' படைக்கின்ற வழக்கு வெற்றிலைச் செய்கையை நன்கு ஊக்குவித்திருக்க வேண்டும். கோட்டை வாசல் கிராமத்தின் மத்தியிலும் வெற்றிலைத் தோட்டம் இருந்திருப்பின் அப்பிராந்தியத்தில் அதிமுக்கியத்துவம் பெற்ற பிரதான மான கோயில் ஒன்று இருந்திருக்க வேண்டும் எனலாம். அல்லது 'கோ'வினது உறைவிட மான அரண்மனைத் தேவையை நிறைவு செய்வதற்காகவும் வெற்றிலைத் தோட்டம் அமைந்திருக்கலாம். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலருகே உள்ள ஒரு பெரிய வெற்றிலைத் தோட்டம் போல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் அருகேயும் ஒரு வெற்றிலைத் தோட்டம் இருந்திருக்கக்கூடும். இச்செய்திகள் மேன்மேலும் இப்பிராந்தியத்துப் பண்பாட்டு ஆய்வுத் தளத்தினை எதிர்காலத்தில் விரிவடையச் செய்யும் எனவும் எதிர்பார்க்கலாம்.

'நாயன்மார்கட்டு' என்ற நாமத்தினை இன்று நாற்றிசைகளிலும் பரப்பிவைப்பதற்கான ஓர் நிறுவனமாக நாயன்மார்கட்டுச் சித்தவைத்தியசாலையும் விளங்கிக் கொண்டிருப்பதனைக் காணலாம். மிக நீண்ட வரலாற்றுத் தொன்மையை உடைய இவ்வைத்தியசாலையின் வளர்ச்சி நிலைகள் அறிவியல் ரீதியாக ஆராயப்பட வேண்டியுள்ளன. போர்த்துக்கீசர் காலத்திற்கும் முன்புள்ள ஒரு காலப்பகுதியிலிருந்தே இங்கு சித்தவைத்திய மரபு சித்திக்கத் தொடங்கியிருக்க வேண்டும். தென்னிலங்கையைச் சேர்ந்த ஓர் இளவரசிக்கு ஏற்பட்ட தீர்க்கமுடியாத நோய் ஒன்றினை யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒரு மன்னன், தான் கண்டுபிடித்த அருமருந்தொன்றால் தீர்த்து வைத்தான் என்றவோர் ஐதிகமுண்டு. இத்தகைய மன்னர் குலத்திற்கருகாமையில் நாயன்மார்கட்டு சித்தவைத்திய பரம்பரை தொடர்ந்தும் விருட்சமாக வளர்ச்சி பெற்று வந்தமையே அதன் வரலாற்று முக்கியத்துவ மாகின்றது. சித்த வைத்திய நூல்கள் அரங்கேற்றப்பட்ட அரங்கம் வேறு ஊர்களில் அமைந்திருக்கலாம். ஆனால் அவ்வகைப்பட்ட நூல்கள் நூலாக்கம் பெற்ற மையமாக நாயன்மார்கட்டு விளங்கியிருந்திருக்க வேண்டும். ஏனெனில், சித்த வைத்தியத்துறை தொடர் பான எழுத்தறிவும், நூலறிவும் நூலகங்களும் ஒருங்கே கைவரப்பெற்ற மையமாக அது விளங்கியதனாலாகும். எதிர்காலங்களில் இத்தகைய சிறப்புப் பொருந்திய நாயன்மார்கட்டுப் பிரதேசத்தில் ஆய்வுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு அதன் தொல்லியல் - வரலாற்று - பண்பாட்டுச் சிறப்பம்சங்களை ஆய்வாளர்கள் வெளிக்கொணர முற்படுவர் என எதிர்பார்க் கலாம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமங்களில் விநாயகர் வழிபாடு

சிவாகம கிரியாசாகரம்,
கலாநிதி சிவஸ்ரீ கந்த. சாம்பசிவக்குருக்கள்.

வேதமந்திரங்கள் அனைத்திற்கும் 'ஓம்' என்ற பிரணவமே ஆரம்பத்திலும் முடிவிலும் ஒலிக்கிறது. 'ஓம்' என்ற மந்திரத்தை 'நாதப்பிரம்மம்' என்று ஆன்றோர்கள் சொல்லு வார்கள். ஓங்கார தத்துவத்தை விளக்குவது விநாயகப் பெருமானின் திருவுருவம்.

வேதங்களிலே முதன்மையானது 'இருக்கு வேதம்'. இவ் வேதத்தின் மூன்றாம் மண் டலத்தில் - ''கணானாம் த்வா கணபதிம் ஹவாமஹே'' என்ற மந்திரம் காணப்படுகிறது. இங்கே எடுத்த எடுப்பிலேயே 'கணபதி' என்று குறிப்பிடப்படுகின்றது. கணானாம் பதி = கணபதி.

கணங்களுக்குத் தலைவனாய் இருப்பதனாலே 'கணபதி' என்று போற்றப்பட்டார்.

''ஜேஷ்ட ராஜன்'' — எல்லோருக்கும் மூத்தராசா. எம்பெருமான் விநாயகருக்கு விக்ன ராஜன், கணபதி என்ற சிறப்புப் பெயர்களைச் சூட்டினர். வி + நாயகர், வி - உபசர்க்கம் நாயகம் - தலைமைப்பாடு. இரண்டும் புணர்ந்து விநாயகம் என்றாயிற்று. வி என்றால் இல்லை என்பது பொருள்.

'தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாதவன்' என்று பொருள். வேதமும் அதனாற் போலும் ''ஜேஷ்டராஜன்'' என்று போற்றுகிறது.

விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் இறைவன் நிகழ்த்தும் ஐந்து தொழில்களை உணர்த் துகின்றன. துதிக்கை — படைத்தலையும், மோதகம் ஏந்திய கை — காத்தலையும், அங்கு சம் ஏந்திய கை — அழித்தலையும், பாசம் ஏந்திய கை — மறைத்தலையும், தந்தம் ஏந்திய கை — அருளலையும் செய்கின்றன.

ஆகமம் விநாயகருக்கு முன்பாக ஐந்து முறை கைகளை முஷ்டியாகப் பிடித்துக் குட்டும் படி பணிக்கின்றது. ஆனால் நாம் எல்லாம் மூன்று முறை கைகளை மாறிப் பிடித்துக் குட்டு கிறோம்.

''சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே''.

சுக்ல அம்பர தர = வெண்மையான வஸ்திரத்தைத்தரித்தவரும், விஷ்ணும் = சர்வ வியாபியும், சசிவர்ணம் = சந்திரன் போன்ற நிறமுடையவரும், சதுர்புஜம் = நான்கு புஜங்களை உடையவரும், பிரசன்ன வதனம் = யானை முகம் போன்ற முகத்தை உடைய வரும் ஆகிய விநாயகப் பெருமானை, த்யாயேத் = தியானம் செய்தால், சர்வ விக்ன உபசாந்தயே = சகல விக்கினங்களும் நீங்கிச் சாந்தி உண்டாகும்.

| | |
|---|---|
| சுக்லாம் பரதரம் | — 1 குட்டு. |
| விஷ்ணும் | — 1 குட்டு. |
| சசிவர்ணம் | — 1 குட்டு. |
| சதுர்புஜம் | — 1 குட்டு. |
| பிரசன்ன வதனம் | — 1 குட்டு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக ஐந்து முறை குட்டி விநாயகரை வணங்கவேண்டுமென்று ஆகமம் கூறுகின்றது.

''முஷ்டிமுத்ராம் ப்ரகுர்வீத மத்யமாங்குலி மத்யமே /
மஸ்தகம் தாடயித் வாதப் லாவயெத் ம்ருதம் தத: /
விநாயக, மனு ஸ்மிருத்ய /குட்டனம், பஞ்சவாரகம் //

கஜமுகாசுரனை விநாயகர் சம்ஹாரம் செய்தவுடனே அவன் பெருச்சாளி உருவெடுத்து அவருக்கு வாகனமாகி அவரைப் போற்றிப் புகழ்ந்தான். ''யாது வரம் வேண்டும்'' என்று விநாயகர் கேட்க அவன், ''நான் அரசனாக இருந்த போது தேவர்களுக்குத் தந்த சிக்ஷை தலையில் மூன்று முறை குட்டிக் கொள்ளுதல். அவர்கள் இதனை என் முன்னிலையில் செய்தார்கள். தேவரீர் என்னை ஆட்கொண்டமையினால் இன்று முதல் உமது சந்நிதியில் பக்தர்கள் 'ஐந்து முறை' குட்டி உம்மை வணங்க வேண்டும் என்று வரம் கேட்கிறேன்'' என்றான். 'அவ்வாறே ஆகட்டும்' என்று வரம் கொடுத்தார், விநாயகர்.

எல்லா ஆகமங்களிலும் விநாயகர் வழிபாடு, பூஜை முதலிடத்தைப் பெறுவதற்குக் காரணம் என்னவோ எனின், ''ப்ருஹ்மணஸ்பதி'' எனில் 'வேதத்திற்குத் தலைவன்' என்று பொருள். வேதமந்திரங்களுக்கு முதலில் 'ஓம்' என்னும் பிரணவமே ஒலிக்கப்படுகிறது. 'ஓம்' என்று கூறியே வேதத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆகவே, பிரணவ சொரூபி ஆகிய விநாயகருக்கு முதற்கண் பூஜையும், வழிபாடும் நடைபெறலாயிற்று. யானை முகம் அமைந்தது யாதோ எனில், உலகில் உண்டாகும் மற்ற எல்லா ஒலிகளைக் காட்டிலும் யானையின் குரல் ஒலி பிரணவ ஒலியை நன்கு புலப்பட ஒலிப்பதால் ஓங்கார வடிவமான யானை முகம் இவருக்கு அமைந்தது.

பிரணவம் ஐந்து எழுத்தின் சேர்க்கை

ப்ரதமம் தாரகா காரம் த்வித்யம் தண்ட
முச்யதே / த்ரதீயம் குண்டலா காரம் //
சதுர்தம், ஹ்யர்த சந்த்ரகம் /
பஞ்சமம் பிந்து சம்யுக்தம்
ப்ரணவ பஞ்சு லக்ஷணம் //

முதலாவது நட்சத்திரப் புள்ளி ൦ - இரண்டாவது வடிவம் . . தண்டம் போலப் — படுக்கையிற் கோடு மூன்றாவது வடிவு வட்டம் (O) நான்காவது உருவம் பிறைமதி (U) ஐந்தாவது உருவம் பிந்து,, (.-) 1 புள்ளி வட்டமும் படுக்கைக் கோடும் சேர்ந்தால் பிள்ளையார் சுழியாகும் //.

மூலாதாரம் கணபதியின் இருப்பிடம் குண்டலிநீ. இதுதான் மூல நாடி. அன்னத்தின் குரல் போன்ற ஒலியுடையது //

நாடி மூலா வ்ரச்ச. /

## தோர்பி கரணம்

விநாயகம் என்ற பெயரைக் கொடுத்துக் கோபுர வாசலிலே தென்புறமாக அமர்ந்திருக்கும் பொழுது மஹாவிஷ்ணுமூர்த்தி விநாயகரை வணங்காது உள்ளே செல்ல நினைத்தார்.அப்போது விநாயகர் அவரது சக்கராயுதத்தைப் பிடுங்கி வாயிற்போட்டு விழுங்கினார். விஷ்ணு மூர்த்தி ஏக்கம் அடைந்தவராய், ''அப்பா விநாயகா, என் சக்கராயுதத்தைக் கொடு'' என்று வேண்டி நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு விநாயகர் "மாமா அது வயிற்றினுள் போய்விட்டது. எடுக்க முடியாதே" என்றார். விநாயகரைச் சிரிக்க வைக்கும் நோக்குடன் விஷ்ணுமூர்த்தி "தோர்பி கரணம்" செய்தார். இரண்டு கைகளினால் இரண்டு காதுகளையும் மாறி மாறிப் பிடித்து, தோர்பி கரணம் போட்டார். இதைப் பார்த்த விநாயகர் பெரிதாகச் சிரித்தார். அப்பொழுது சக்கராயுதம் வெளியே வந்து விழுந்தது. காக்கும் கடவுளாகிய விஷ்ணுமூர்த்தி உலக மக்களுக்கு, இதை உணர்த்த "நீங்களும் இது போலத் தோர்பி கரணம் போட்டால் — அந்த விநாயகப் பெருமானுடைய பானை போன்ற திரு வயிற்றிலே அண்ட சராசர மனைத்தும் அடக்கம் — கேட்ட தெல்லாம் கொடுப்பார்" என்று கூறிப் போந்தார்.

## விநாயகருக்குச் சிதறு தேங்காய் உடைப்பது ஏன்?

திரிபுர தகனத்தின் பொருட்டு எம்பெருமான் இரதத்தின் மேல் ஆரோகணித்தார். அப்பொழுது இரதத்தின் உருளைகள் நகராது நிற்பதைக் கண்ட நாரதர், "துதிக்காமல் இருப்பவர்களையெல்லாம் துதிக்க வைக்கும் தும்பிக்கையானை நினைக்காத காரணந் தான் இது" வென்று உணர்ந்தார். விநாயகரை அடைந்து வேண்டினார். "என்னை முழுமுதற் கடவுள் என்று முதன்மையை எனக்குக் கொடுத்த பரமசிவனே என்னை நினைக்காமல், துதிக்காமல் திரிபுரதகனம் செய்ய முடியுமா? இந்த மகாதவறைச் செய்தவரை மன்னிக்க முடியாது. இதற்குப் பிராயச்சித்தமாக, என் அப்பனின் தலையைக் கொண்டு வந்து என் முன்னே சிதறஅடி" என்று விநாயகர் கூறினார். இதனை எம்பெருமானிடத்திலே சென்று நாரதர் விண்ணப்பிக்க அவர் தம் திருக்கரங்களை நீட்டியவுடன், மூன்று கண்களுடனும் ஜடா பாரத்தோடும் கூடிய தேங்காய் உற்பவித்தது. அதுமுதல் விநாயகருக்குச் சிதறு தேங்காய் அடிக்கும் வழக்கம் ஏற்பட்டது. விநாயகரைத் தவிர வேறு எந்தச் சுவாமிக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிதறு தேங்காய் அடிப்பது மகா தவறு.

விநாயகரின் வலக்கண் சூரியன். வலக்கண் பார்வை விநாயகருக்கு உன்னதமாக அமைந்ததால் அவருக்கு "வெயிலுகந்த விநாயகர்" என்ற நாமம் ஏற்பட்டது. விநாயகராகிய யானையை உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனும் தறிநாட்டி, நீங்காத தலையன்பாகிய சங்கிலியால் பிணைத்து வைப்போமாயின், அவ்வானையின் கருணை வெள்ளம் பெருகப் பெற்று ஜீவ போதம் சிவபோதமாக விளைதலுறும்.

திருமூலர் விநாயகரை "ஞானத்தின் கொழுந்து" என்றார். ஓங்காரப் பிரணவத்தின் விரிவே அபரஞானம்.

'ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்' என்கிறது சித்தியார். ஞானாநுபவம், விநாயகரால் விளைக்கப்படுமாதலால், அவரையே முதற்கண் வழிபடல் வேண்டும்.

எம் நாயகனே இடரெல்லாம் கழிவிக்கும் விநாயகன். விநாயகன் மூலமாக ஞான சாஸ்திரம் கைவரப்பெற்று ஆரும் பெறா இன்பம் பெறுவோமாக.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேகக் கிரியை விளக்கம்

சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள்,
பிரதமகுருவும் பரிபாலகரும்,
அரசடி விநாயகர் தேவஸ்தானம், நாயன்மார்கட்டு.

இப் பூமியிலே சகல ஆன்மாக்களும் பிறந்து இறந்து உழல்வன. அவைகள் பசுக்கள் என்று கூறப்படும். இவைகள் செய்த நல்வினை தீவினைப் பயன்களைப் பெறுவதற்காக ஆலய வழிபாடு செய்யப்படுகிறது. பரமபிதாவாகிய சிவபெருமானின் திருவதனங்களில் இருந்து தோன்றிய வேத சிவாகமங்களின் பிரகாரம் சிற்பசாஸ்திர இலக்கணங்களுக்கமைய ஆலயம் நிர்மாணிக்கப்படுகிறது. கருவறையின் திருவுருவில் கருணையே உருவாகும்படி மந்திரங்களைப் பதித்து அபிஷேகித்தல் கும்பாபிஷேகம் எனப்படும். இவை நான்கு வகைப்படும்:

1. ஆவர்த்தம்: புதிதாக ஒரு ஆலயத்தை நிர்மாணித்து அதன் கருவறையில் மூர்த்தியை ஸ்தாபித்து கும்பாபிஷேகம் செய்தல் ஆவர்த்தம் எனப்படும்.

2. அநாவர்த்தம்: பல காலமாக நித்திய நைமித்திய வழிபாடுகள் இல்லாமல் நிலை குலைந்து இருக்கும் மூர்த்திக்குக் கும்பாபிஷேகம் செய்தல் அநாவர்த்தம் எனப்படும்.

3. புநராவர்த்தனம்: நித்திய நைமித்திய வழிபாடுகள் நடைபெறுகின்ற ஆலயத்தின் கட்டடத்திலும் அஷ்டபந்தனத்திலும் ஏற்பட்ட பழுதுகளைத் திருத்திக் கும்பாபிஷேகம் செய்தல் புநராவர்த்தனம் எனப்படும்.

4. அந்தரிதம்: ஆலயத்தில் ஏற்படும் திருட்டு, நித்திய பூசையில் ஏற்படும் இடையூறுகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டுச் செய்யப்படும் கும்பாபிஷேகம் அந்தரிதம் எனப்படும்.

மேலே கூறிப்பிட்டதில் இருந்து நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது புனராவர்த்தன அஷ்டபந்தன கும்பாபிஷேகம் எனப் பெயர் பெறும். இதில் நடைபெற்ற கிரியைகளின் விளக்கம் பின்வருமாறு;

#### முகூர்த்தநிர்நயம்

மூர்த்தி, குரு, எஜமான், கிராமமக்கள் அனைவருக்கும் நன்மை ஏற்படும் பொருட்டு மூர்த்திக்குக் கும்பாபிஷேகம் செய்வதற்கான சுப முகூர்த்தத்தை நிர்நயித்தல்.

#### ஆச்சாரிய வர்ணம்

பிரதிஷ்டா பிரதம குருவையும் போதகாசிரியர், சாதகாசிரியர், மூர்த்திபர்கள், உதவிக் குருமார்களையும் ஆலயத்துக்கு மங்களவாத்திய சகிதம் எழுந்தருளச் செய்தல்.

#### விநாயக வழிபாடு:

நாம் ஆரம்பிக்கின்ற கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் எவ்வித இடையூறுகளும் இன்றி நிறைவு பெற விநாயகனை வேண்டுதல் செய்தல்.

#### மூர்த்தி அனுக்ஞை:

பிரதம குருவானவர் அனுக்ஞையில் பூசித்து, திரவியங்களுடன் மங்களவாத்திய சகிதம் பிரதட்சணமாகப் பாலாலயத்தை அடைந்து, விதிப்படி பூசித்து, மூல மூர்த்தியின் உத்தரவைப் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரவியபூசை, திரவியவிபாகம்**

கும்பாபிஷேகத்துக்குச் சேகரிக்கப்பட்ட திரவியங்களை முறைப்படி பூசித்து அவற்றை மூன்று பாகமாக்கி முதற்பாகத்தைத் திருப்பணிக்கும் இரண்டாம் பாகத்தை நித்திய நைமித்திய பூசைக்கும் மூன்றாவது பாகத்தைத் திரும்பவும் பதினொரு பாகமாக்கிக் கீழே தரப்படுகின்ற அளவுகளுக்கமையச் செலவு செய்தல் திரவிய விபாகம் ஆகும்.

| | | |
|---|---|---|
| யாகத்துக்காக | 3 | பாகமும் |
| அபிஷேகத்துக்காக | 1 | பாகமும் |
| குருவுக்காக | 1 | பாகமும் |
| உதவிக் குருமாருக்காக | 1 | பாகமும் |
| ஆச்சாரிய போசனத்திற்காக | 2 | பாகமும் |
| ஜபம், தானம் இவற்றுக்கு | 2 | பாகமும் |
| மண்டாலாபிஷேகத்துக்கு | 1 | பாகமும். |

இப்படியாகத் திரவியத்தைப் பாகம் செய்து கொள்ளுதல்.

**கணபதி ஹோமம்**

நாம் தொடங்கிய மஹா கும்பாபிஷேகம் விக்கினங்கள் இன்றி நிறைவேற விக்கினம் போக்கும் விநாயகப் பெருமானுக்குப் பூசை, அபிஷேகம், ஹோமம் முதலியவற்றைச் செய்து பிரார்த்தித்துக் கொள்ளுதல்.

**நவக்கிரகமகம்**

நவக்கிரக தேவர்களைக் கும்பத்திலும் அக்கினியிலும் மண்டலத்திலும் பூசித்து நட்சத்திர தேவர்களையும் சேர்த்து வழிபாடு செய்தல்.

**கங்கா பூசை**

ஆலயத் திருமஞ்சனக் கிணற்றில் கங்கா தேவியை வழிபாடு செய்து கங்கா தீர்த்தத்தை எடுத்து வருதல்.

**பூதாக்கிய சங்கிரகணம்**

யாக அக்கினி காரியம் செய்வதற்காகச் சூரிய பகவானை வழிபாடு செய்து உருப்பெருக்குக் கண்ணாடியின் உதவியினாலே சூரிய ஒளியில் இருந்து அக்கினியை எடுத்தல்.

**பிரவேச பலி**

நாம் கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் எட்டுத்திக்கிலும் வசிக்கின்ற இயக்கர், ராட்சதர், பிசாசர், பிரம்மராட்சதர், பூதர், காளி, பைரவர் முதலிய தேவதைகளுக்கு வேண்டிய உணவுகளைக் கொடுத்துப்பூசித்து "கடல், மலை, காடு, நதி, மயான பூமி ஆகிய இடங்களுக்குச் செல்லுங்கள். இது சிவன் கட்டளை" எனக் கூறி அனுப்புவது ஆகும்.

**கிராமசாந்தி**

ஆலயம் அமைந்திருக்கும் கிராமத்தைச் சாந்தி செய்யும் பொருட்டு அசுரன், இராட்சதன் பிரம்ராட்சதன், பைசாசன் முதலிய துஷ்டதேவதைகளினால் கேடுவராமல் காவல்தெய்வமான சேத்திரபாலரை யந்திரத்தில் பூசித்து ஓமம்.பலி என்பனவற்றைச் செய்து எட்டுந்திக்குகளிலும் அஷ்டபைரவர்களைப் பூசை செய்து பலி கொடுத்து இந்த ஆலயத்திற்கும் கிராமத்திற்கும் ஏற்படும் சகல தோஷங்களையும் நிவிர்த்தி செய்யும் பொருட்டு வேண்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாஸ்து சாந்தி**

மஹா கும்பாபிஷேகம் செய்ய இருக்கும் ஆலயத்தையும் விதிகளையும் யாகசாலையையும் அக்கினியினால் சுத்தம் செய்வதற்காகச் செய்யும் கிரியை.

**மிருத் சங்கிரகணம்**

பிரமாவையும் பூமிதேவியையும் பூசித்து பூமிதேவியின், வயிற்றுப் பாகத்தில் இருந்து மண் எடுத்தல்.

**அங்குரார்ப்பணம்**

கிருத்திகா, ரோகிணி சமேதரான சோம தேவரைப் பூசித்து எடுக்கப் பெற்ற மண்ணைப் பன்னிரண்டு பாலிகைகளில் நிரப்பி அதில் பன்னிரண்டு சூரியர்களைப் பூசித்து, நவதானியங்களை விதைத்து முளைக்க வைத்தல்.

**இரட்சாபந்தனம்**

தொடங்கிய கும்பாபிஷேக கருமம் நிறைவு பெறும் வரையில் குருமாரை எந்த வகையானஜசௌசங்களும் தீண்டாவண்ணம் சுவர்ணத்தினாலேனும் வெள்ளியினாலேனும் பட்டு நூலினாலேனும், பருத்தி நூலினாலேனும் உருவாக்கப்பெற்று அதில் அட்ட நாகங்களை மந்திர பூர்வமாக வழிபாடு செய்து வலது மணிக்கட்டில் கட்டுதல் ஆகும்.

**கடஸ்தாபனம்**

கடத்தைச் சுத்தமாக்கி, சப்த தாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காகக் கும்பத்தின் அடியில் ஆத்ம தத்துவத்தையும் பிரம்மாவையும் கும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும் விஷ்ணுவையும் கும்ப நுனியில் சிவதத்துவத்தையும் உருத்திரனையும் கும்பத்தில் ஒன்பது சக்திகளையும் மூவிழை நூலில் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்திரி அகோரரையும் கும்பத்துக்குக் காட்டப்படும் தூபத்தில் அர்ச்சினி சக்தியையும் தீர்த்தத்தில் கங்கை முதலான பண்ணிய தீர்த்தங்களையும் மத்தியில் வருணனையும் நவரத்தினத்தில் நவசக்திகளையும் தங்கத்தாமரைப் பூவில் சதாசிவனையும் வாசனைத் திரவியங்களில் சப்த மாதருக்களையும் பூசித்து குடத்தில் இட்டு மாவிலையைச் சடையாகவும் தேங்காயைச் சிரசாகவும் கூர்ச்சத்தை முடியாகவும் வஸ்திரத்தைத் தோலாகவும் பூசிப்பதால் கும்பமானது சர்வ தேவதா சொரூபமாகிறது.

**கலா கர்ஷணம்**

கலைகள், தத்துவங்கள், புவனங்கள், வர்ணங்கள், பதங்கள், மந்திரங்கள் ஆகிய சடத்துவ நியாசத்தைச் செய்து பாலாலய பிம்பத்திலிருந்து கலைகள் கும்பத்துக்கு வரச் செய்தல். ஆகவே விம்பத்திலிருக்கும் மந்திர சொரூபமான ஈசுவரனைக் கும்பத்தில் சாந்நித்தியமாக இருக்கும் படி ஆவாகித்தல் கலா கர்ஷணம் எனப்படும்.

**யாக அமைப்பும் பூஜையும்**

கும்பாபிஷேக யாக மண்டபமானது சடத்துவாக்களின் வடிவாக அமைவது. யாகசாலையின் மேற்பரப்பில் சாந்திய தித கால சொரூபமும் நான்கு துவாரங்களும் சாந்தி, வித்தியா, பிரதிஷ்டை, நிவிர்த்தி என்னும் கலாத்துவ என்னும் வடிவாய் உள்ளன. யாகத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு அட்சரங்களையும் கொண்ட வர்ணாத்துவ வடிவானது கும்பங்கள் பதினொரு மந்திராத்துவா வடிவாக உள்ளன. ஓமத்திரவியங்கள் முப்பத்தாறு தத்துவா வடிவாயுள்ளன. மண்டபம் இருநூற்றிருபத்துநான்கு புவனாத்துவா வடிவமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகசாலை உள்ள நிலம் கூர்மாசனம், அதற்கு மேல் கட்டப்படும் வேதிகை அனந்தாசனம், வேதிகையின் மேல் கட்டப்படும் மகா வேதிகை சிங்காசனம். அதில் பரவப்படும் நெல் யோகாசனம், அதன் மேல் பரவப்படும் அரிசி பத்மாசனம். அதற்கு மேல் படிப்படியாகப் பரவும் பயறு, உழுந்து, கடலை முதலிய தானியங்கள் தாமரையில் உள்ள உறுப்புக்கள். எள்ளு விமலாசனம். அதன் மேல் பரவப்படும் நெற்பொரி சக்தியாசனம் ஆகும்.

இப்படியாக மந்திர பூர்வமாக அமைக்கப்பெற்ற பிரதான வேதிகையிலே கலா கர்சணம் செய்யப்பட்ட பிரதான கலசத்தை வைத்து யாக சுற்று வேதிகையில் முறையே சூரியபகவான், சாந்தி முதலான நான்கு கலைகள், அஷ்டமூர்த்திகள், லோகபாலகர்கள், நான்கு வேதங்கள், மாலினி, யாகேஸ்வரன், யாகேஸ்வரி, வீரேசன், சேத்திரபாலர், சப்த குரு இவர்களுக்கு மேற்படி கும்பங்கள் அமைத்துப் பூசை செய்து அதன் பின் பிரதான கலசத்தில் மூல மூர்த்தியை விஷேசமாக வழிபாடு செய்து முன்பு சூரிய பகவான் இடத்திலிருந்து பெறப்பட்ட அக்கினியைப் பிரதான குண்டத்தில் பிரதிஷ்டை செய்து பூரணம் அடைந்த பின்பு குண்டத்தில் இருக்கும் சிவாக்கினியை ஐந்து பாகமாக்கி கிழக்கில் ஆகவனியாக்கியும் தெற்கே தெஷ்சனக்கினியும் வடக்கே கேவலாக்கினியும் மேற்கில் கார்கபத்தியாக்கினியும் பூசிக்கப்பட்டு இவர்களின் மூர்த்தி, மூர்த்தீஸ்வரர்களையும் சம்கிதா மந்திரங்களையும் பூசித்து முறையே பஞ்ச குண்டலங்களில் ஓமம் செய்து அக்கினியில் மூர்த்தியை ஆவாகித்து விசேடஹோமம் செய்தலாகும்.

**ஸ்தூபிஸ்தாபனம்**

நிர்மாணிக்கப்பட்ட சுந்தர விமானத்தின் மேலே உள்ள பத்மத்தில் ஸ்தூல லிங்கமாகிய ஸ்தூபியை ஸ்தாபனம் செய்தல்.

**கோ வாசம்**

கோ மாதாவின் நான்கு கால்களில் வேதங்களையும், உடம்பில் முப்பத்து முக்கோடி தேவர்களையும் மகாலட்சுமியையும் பூசித்து ஆலயவீதியை வலம் வரச் செய்து கற்பக் கிருகத்தில் வாசம் செய்வித்தல்.

**தீபஸ் தாபனம்**

பூரண குர்பத்தையும் தீபத்தையும் வழிபாடு செய்து வீதி வலமாக எடுத்து வந்து கற்பக் கிரகத்தில் தீபஸ்தாபனம் செய்தல்.

**யந்திரஸ்தாபனம்**

மூல மூர்த்தியின் மந்திரங்கள் எழுதப்பட்ட யந்திரத்தை மூர்த்தியின் ஆசனத்தின் உரிய இடத்தில் ஸ்தாபித்தல்.

**பிம்பஸ்தாபனம்**

குறித்த சுபவேளையில் மூர்த்தியைக் கற்பகக் கிருகத்தில் பிரதிஷ்டை செய்தல்.

**அஷ்டபந்தனம்**

சுக்கான் கல்லு, குங்கிலியம், கொம்பரக்கு, தேன் மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, வெண்ணெய், சாதிலிங்கம் ஆகிய எட்டு வகையான திரவியங்களைப் பங்கு மானப்படி சேர்த்து, இடித்து, பிம்பத்தையும் ஆசனத்தையும் பெருந்தும்படி சாத்துவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணெய்க் காப்பு**

அஷ்டபந்தனம் செய்யப்பட்ட மூர்த்திகளுக்குப் பக்தர்கள் நல்லெண்ணெய் சாத்துதல்.

**பிம்பசுத்தி**

திருவுருவங்களைச் சுத்தப்படுத்துவதற்குப் பதினாறு வகையான உதகங்கள் பூசை செய்து அபிஷேகம் செய்தல்.

**மூர்த்தி ரக்ஷாபந்தனம்**

கும்பாபிஷேகத்தின் நிமித்தம் பெருமானுக்குக் காப்புக்கட்டல்.

**ஸ்பர்சாகுதி**

யாக கும்பத்திற்கும் மூர்த்திக்கும் தொடர்பை ஏற்படுத்தி யாகத்திலே பூசிக்கப்பட்ட மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மந்திரம் ஆகியவற்றை ஓமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்த ஸ்தாபனங்களில் ஸ்தாபித்தல்.

**மகா பூர்ணாகுதி**

நான்கு குண்டங்களிலும் பூர்ணாகுதியைச் செய்து பிரதான குண்டத்தில் அக்கினியை ஒடுக்கி, பின்பு பிரதான குண்டத்தில் சுவலித்து எரிகின்ற சிவாக்கினியில் இறைவனின் திருப்தியின் பொருட்டு மூல மந்திரத்தை வௌசட் அந்தமாக உச்சரித்து மகாபூர்ணாகுதி செய்து அக்கினியில் இருக்கும் மூர்த்தியைப் பிரதான கும்பத்தில் ஆவாகனம் செய்தல்.

**தீபாராதனை**

மகா யாகத்தில் விசேட பூசை, அர்ச்சனை, வழிபாடுகள் செய்து வேதம், தோத்திரம், திருமுறை, ஆசீர்வாதம் என்பன செய்து தானாதிகளைக் கொடுத்து நிறைவு படுத்துதல்.

**கும்பாபிஷேகம்**

குறிப்பிட்ட சுப நேரத்தில் பெருமானுக்குக் கும்பாபிஷேகத்தைச் செய்து தேவர்கள் வழிபாட்டுக்காகத் திருக்கதவம் சாப்பிட்டு, திருமறை ஒலி, திருக்கதவம் திறந்து தர மங்கள தரிசனம் செய்து, ஸ்திராகுதி செய்து மகா யாக உத்வாசனம் செய்தல்.

**ஆசாரியார் உற்சவம்**

கும்பாபிஷேக சிவாசாரியார்களை முறைப்படி வணங்கி அவர்களுக்குத் தெட்சணை, தாம்பூலம் கொடுத்துக் குருவின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுதல்.

**எஜமானுக்குக் கும்பாபிஷேக பலனைக் கொடுத்தல்**

பிரதம குருவானவர் மஹா கும்பாபிஷேக பலனைப் புனித தீர்த்தத்துடன் தாரை வார்த்து எஜமானுக்குக் கொடுத்தல்.

**மஹா அபிஷேகம்**

இது முதலாவது அபிஷேகம் எனப்படும். ஸ்நபன கும்பம் வைத்து ஓமம் செய்து மூர்த்திக்குத் தயிலம், மாக்காப்பு, பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், பால், தயிர், நெய், வெந்நீர், தேன், கரும்பு, பழவர்க்கம், இளநீர், அன்னம், சகஸ்திர தாரை, வாசனாதி திரவியங்களாலும் கும்பதீர்த்தத்தினாலும் முறைப்படி அபிஷேகித்து அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை செய்தல்.

**மண்டலாபிஷேகம், மண்டலப் பூர்த்தி**

இது கும்பாபிஷேகம் நடைபெற்ற நாளிலிருந்து 45 நாட்கள் வரை அபிஷேகம் செய்தலாகும். 45 ஆம் நாள் ஆகிய இறுதி நாள் மகா சங்காபிஷேகம் செய்து திருவூஞ்சலும் உற்சவமும் செய்து கும்பாபிஷேகத்தை நிறைவு செய்தல்.

மேற் கூறிய பிரகாரம் வேதாகமங்களில் கூறிய கும்பாபிஷேகக் கிரியைகளை முறையாகநடாத்தி இறைவன் திருவருளைச் சகல ஆன்மாக்களும் பெற்றுய்யும் வண்ணம் எல்லாம் வல்ல வெயிலுகந்த விநாயகனைப் பணிகின்றேன். ☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயன்மார்கட்டுக் கல்வெட்டு

வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்தை அடுத்துள்ள நாயன்மார்ட்டுத் திருக் குளத்திலிருந்து பெறப்பட்ட கல்லிலே 'சிங்கையாரியன் இத்தீர்த்தக் குளத்தைக் கலி (யுகம்) 3025 இலே கட்டினான்' எனக் கூறப்படுகின்றது. (இது முப்பது களிலே ஈழகேசரியில் வெளிவந்தது. பின்னர் வேறு பிரசுரங்களிலும் இடம் பெற்றுள்ளது. முத்துக்குமாரசுவாமி, வை., நான்காம் வகுப்பு சரித்திர கதா வாசகம். யாழ்ப்பாணம். 1940 ப. 111.) இக்கல்வெட்டிலுள்ள தமிழ் எழுத்துக் கள் மிகவும் தெளிவாக உள்ளன. இது யாழ்ப்பாண அரசர் காலத்தினைச் சேர்ந்ததெனப் பொதுவாக நம்பப்படுகின்றது. ஆனால், சிலர் இதனைப் பிற் காலத்தில் அரசனின் பெயரால் வேறு யாரோ பொறித்திருக்கலாமெனவுங் கொள்வர். இதிலே கூறியுள்ள ஆண்டாகிய 3025 தான் பெரிய சிக்கலை (பிரச் சினையை) ஏற்படுத்தியுள்ளது. இதன்படி இது சுமார் 2000 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும். ஆனரல், அவ்வாறு கொள்ள முடியாது.

—சிற்றம்பலம், கலாநிதி சி. க., யாழ்ப்பாண இராச்சியம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
1992 ப. 19

## நாயன்மார்கட்டுக் கல்வெட்டு

யாழ்ப்பாண மன்னர் தொடர்பாக நல்லூரிற் கண்டுபிடிக்கப்பட்ட முதலா வது சாசனம் என்ற வகையில் இதற்குத் தனிமுக்கியத்துவம் உண்டு. 1942ஆம் ஆண்டு இங்குள்ள அரசடி விநாயகர் கோயில் திருக்குளம் வெட்டியபோது இது கண்டு பிடிக்கப்பட்டு அங்குள்ள கோயிலில் நீண்டகாலம் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைச் சிரேஷ்ட விரி வுரையாளர் செ. கிருஷ்ணராசாவினது முயற்சியினால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூதன சாலைக்குக் கொண்டுவரப்பட்டது. 2 அடி நீளம், 1 1/2 அடி அகலம் கொண்ட இக்கல்வெட்டில் ஐந்து வரிகள் உள. இதனை வாசித்தோர் கலி 3025 இல் தீர்த்தங் கொடுக்கச் சிங்கையாரியனால் அமைக்கப்பெற்றது என வாசித்து இதன் காலத்தை கி. மு. முதலாம் நூற்றாண்டெனவும் கொண்டுள் ளனர். இதன் வரிவடிவ வளர்ச்சியை நோக்கும் போது கல்வெட்டில் உள்ள காலம் பிழையாக எழுதப்பட்டிருக்கலாம் போலத் தெரிகிறது. இதன் எழுத்த மைதிகொண்டு இக்கல்வெட்டு 15ஆம் 16ஆம் நூற்றாண்டிற்குரியதுஎனத் தெரிந்து கொள்ளலாம். இதைப் பிற்காலத்தில் வாழ்ந்த ஒருவன் தனக்கு முன் வாழ்ந்த சிங்கையாரியனின் பெயரால் எழுதுவித்திருக்கலாம் போலத் தெரிகிறது.

—புஷ்பரத்தினம், ப., யாழ்ப்பாண இராச்சியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி
1929. பக். 98-99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய மரபில் நீரின் புனிதத்துவம்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்,
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உலகில் உள்ள உயிரினங்கள் உயிர் வாழ இன்றியமையாது தேவைப்படும் பொருள்களுள் நீரும் ஒன்றாகும். இயற்கையின் கொடையாக விளங்கும் மழையினால் கிடைக்கப்பெறும் நீர் இவ்வுலகை வாழ வைக்கின்றது. 'வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோன் உயர்வான்' என்ற அமுதவாக்கு நீரின் பெருமையைக் காட்டி நிற்கின்றது. இவ்வாறு மக்களது வாழ்க்கை நிலைபெறுவதற்கு உயிர்த்துணையாக விளங்குவது நீராகும். இவ்வுலகின் பெரும்பகுதி நீரினாலேயே சூழப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மனித வாழ்க்கையில் நீர் பெறும் இத்தகைய முக்கியத்துவம் காரணமாகவே இந்து சமய மரபில் நீரினைத் தெய்வமாகவும் புனிதமாகவும் போற்றி வழிபடும் மரபு காணப்படுகின்றது.

நீரை இறைவனாகவே போற்றும் மரபு இந்து சமய இலக்கியங்களில் பரவலாக உள்ளது. பஞ்சபூதங்களில் ஒன்றாக விளங்கும் நீர் சிவனது மூர்த்தங்களில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப்படும் ஐம்பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாக இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும் இவ் வேழு அம்சங்களில் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டும் சேர்ந்து விளங்கும் வகையால் சிவனை ''அட்ட மூர்த்தி'' என்ற திருநாமத்தினால் புராணங்கள் போற்றுகின்றன. இறைவன் தனிப்பெரும் பசுபதியாக ஐம்பெரும் பூத முதலாம் எல்லாப் பொருள்களிலும் நிறைந்துளன். எவ்வெப் பொருளும் அவனேயாகி நிற்கும் நிலை அவனுக்கே உரிய தன்மையாகும்.

சிவன் ஐம்பூதங்களில் கலந்து அருள் பாலிக்கும் சிறப்பை மணிவாசகரின் திருவாசகம் போற்றுகிறது.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி.

எனத் திருவகவலில்வரும் அடிகள் இறைவனுக்கும் ஐம்பூதங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பினைக் காட்டி நிற்கின்றன. சிவன் கோயில் கொண்டெழுந்தருளி அருள் சுரக்கும் பஞ்ச பூதத்தலங்களுள் தென்னாட்டில் திருவானைக்கா என்ற தலம் அப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. இறைவனை நீர்மயமாக வழிபடும் மரபு இங்கு உள்ளது.

வேதங்களில் உள்ள துதிப்பாடல்களிலும் ஆகமங்கள் விதித்துக் கூறும் கிரியை மரபிலும் புராணங்களிலும் திருமுறைகளிலும் நீரின் மகத்துவம் எடுத்துக் கூறப்படுகின்றது. நீரின்றி இந்து சமய மரபில் எக்கிரியையும் நிறைவு பெறுவதில்லை. வழிபாட்டிற்குரிய பொருட்களைப் புனிதப்படுத்தவும் வழிபாட்டில் பங்கு கொள்ளும் அடியவர்கள் அகப்புற நிலைகளில் புனிதமடையவும் இறைவனது வழிபாட்டிற்குரிய சின்னமாக விளங்கும் திருவுருவங்களில் தெய்விக சாந்நித்தியத்தை ஏற்படுத்தவும் நீரே முக்கியமான புனிதப் பொருளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றது. இறைவனது திருக்கோயில்கள் அமையும் இடங்களில் நீர்நிலைகள் முக்கியத்துவம்பெறுவன. நதிகளையும் அவை கடலோடு ஒன்று சேரும் இடங்களையும் புனிதமாகப் போற்றும் மரபு பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. நதிகளைத் தேவியராகப் போற்றி வழிபடுதல் இந்து சமய மரபில் நாம் காணும் சிறப்பம்சமாகும்.

வேதங்களின் சமய மரபுகளை விரித்துக் கூறும் விளக்க நூல்கள் பிராமணங்கள். அவற்றுள் சிறப்புப் பெறும் சதபத பிராமணம் நீரின் சிறப்பினைக் கூறுகின்றது. இவ்வுலகில் தொடக்கத்தில் நீரே இருந்தது என்ற கருத்து அதில் காணப்படுகின்றது. இருக்கு வேதத்தில் நீருடன் நெருங்கிய தொடர்பு பூண்டவனாக இந்திரன் போற்றப்படுகின்றான். இந்திரனது வீரச்செயல்களைப் போற்றும் இருக்கு வேதம், அவனே வரட்சி என்னும் அசுரனைக் கொன்று நீரினை மலையிலிருந்து பாய்ந்தோட வழிசமைத்தவன் எனக் கூறும். (1-32.1-3). சதபத பிராமணம் நீரைப் பொண்ணாகவும் தீயை ஆணாகவும் குறிப்பிட்டு இவற்றின் சேர்க்கையினால் உயிரினம் தோன்றுவதாகக் குறிப்பிடுகின்றது. ஐதரேய உபநிடதம் உலகைப் பாதுகாப்பவன் என்ற நிலையில் பிரஜாபதி மனிதனை நீரிலிருந்து எழச் செய்தான் எனக் கூறும். (*1.3*)

யசுர் வேதத்தில் அக்கினியைத் தோற்றுவிப்பதற்குரிய இடத்தில் கூறப்படும் மந்திரம் நீரின் பெருமையை உணர்த்துவதாக உள்ளது. ''நீரின் ஒட்டத்தில் உன்னை வைக்கின்றேன்; பெருகிவரும் நீரில் உன்னை வைக்கின்றேன்; நீரின் ஒளியில் உன்னை வைக்கின்றேன்; நீரின் இருப்பிடத்தில் அமர்வாயாக'' என வரும் அடிகள் நீர் அக்கினியின் பனித இருப்பிடமாக விளங்குவதைக் காட்டுகின்றன ''நீரினால் இப்பூமாதேவி புனிதமடைவாளாக; புனிதமடைந்த அவள் என்னையும் புனிதப்படுத்துவாளாக. ஓ நீரே! நீயே அமிர்தம்; நீயே அமிர்தத்தின் இருப்பிடம்'' என்ற வேதகாலச் சிந்தனைகளும் நீரின் புனிதத்துவத்தினை எமக்கு உணர்த்துகின்றன.

உயிரூட்டமான சக்திகளை வழங்குவதிலும் நீர் பெருமை பெறுகின்றது. உலகை மனிதனின் வாழ்விடமாக விளங்கச் செய்வதிலும் நீரே முக்கியத்துவம் பெறுகின்றது. நீரினால் நாம் ஒவ்வொருவரும் பிணைக்கப்பட்டுள்ளோம். நீரிலிருந்து எண்ணற்ற மனிதர்களும் தெய்வங்களும் தோற்றம் பெற்ற தெய்விக வரலாறுகள் உண்டு. சரஸ்வதி நதிக்கரையில் மதிநரன் என்ற மன்னன் பன்னிரண்டு வருடங்கள் தவம் செய்ததன் பயனாய் சரஸ்வதி நதி பெண்ணுருவில் அவன் முன் தோன்றி, அவள் மூலம் தன்ஸு என்ற மைந்தனைப் பெற்றான். கங்கையில் இடப்பட்ட சிவனது அக்கினிப் பொறிகளில் கார்த்திகேயன் தோன்றியமையும் இங்கு குறிப்பிடத்தத்தது. கங்காசுதன் என்ற சிறப்புப் பெயர் முருகப் பெருமானுக்கு உண்டு.

விண்ணுலகைச் சார்ந்த கங்கை நதி இந்துக்கள் போற்றும் புனித நதியாகும். அந்நதி சிவனது ஜடா முடியை அலங்கரிக்கும் புனிதத்துவம் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாய்ச் சிவனுக்குச் கங்காதர மூர்த்தி என்ற திருநாமமும் ஏற்படலாயிற்று. இந்தியாவில் தீர்த்த விசேடத்தினால் சிறப்புப் பெறுவனவற்றுள் தெற்கில் இராமேசுவரம் என்னும் சிவத்தலம் விளங்கும் பிரதேசத்தில் சேது மத்யம் என்ற நீர்த்துறைகள் குறிப்பிடத்தக்கன. சேது மத்யம் சேரும் நிலப்பகுதி, நீர்ப்பகுதி அனைத்தும் தீர்த்தம் என்ற நிலையில் புனிதத்துவம் பெறுவன. அது போன்றே வடக்கே பாயும் புனித நதியாகிய கங்கையில் மூழ்கி நீராடினால் செய்த வினைகள் அகலும் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே உள்ளது. இறைவனைத் திருவுருவில் சாந்நித்தியம் கொள்ளச் செய்யும் வகையில் நிகழும் கும்பாபிஷேகத்தின் போது இத்தீர்த்த நீர் புனித கலசத்தில் சேர்க்கப்படுவது மரபாகும். சமயக் கிரியையின் போது நிகழும் கலச பூசையில் பல்வேறு புனித நதிகளின் சாந்நித்தியத்தைக் கலசத்தில் ஏற்படுத்தும் மந்திரங்கள் உச்சரிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கங்கே சயநேமு சைவ கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மிந் ஸந்நிதிம் குரு'

என்ற மந்திரத்தில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி போன்ற நதிகளின் சாந்நித்தியம் கலசநீரில் ஏற்பட வேண்டுமென்ற பிரார்த்தனை குறிப்பிடத்தக்கது. இந்தப் புனித கலச தீர்த்தத்தினால் பூசைக்குரிய பொருட்களுக்கும் பூசையில் பங்கு கொள்ளும் கர்த்தாவுக்கும் தெளித்துப் புனிதமடையச் செய்தல் இக்கிரியையின் முக்கிய அம்சமாகும். தெய்வங்களுக்குரிய பூசையின்போது வழங்கப்படும் பல்வேறு உபசாரங்களில் ஆசமநீயம், ஸ்நானத்திற்குரிய தீர்த்தம் போன்றவை எவ்வித களங்கமுமற்ற புனிதநீரினால் வழங்கப்படுவன.

பிரமவைவர்த்த புராணத்தில் ஹிமவான் மகளாகிய கங்கையைப்பற்றிச் சிவனே புகழ்ந்து கூறுவதாக உள்ளது. ''அவளே ஒருவனது மீட்சிக்குரிய நிலைக்களன்; அவளது நீர்த்துளிகள் கலந்த காற்று ஒருவன்மீது பட்டமாத்திரத்தே பாவஞ்செய்த ஒருவனது பல்லாயிரக்கணக்கான பிறவிகளில் ஒன்றுசேர்ந்த மலைபோன்ற பாவங்கள் உடன் அழிக்கப்படுகின்றன. எவ்வாறு அக்கினியானது எரிபொருளைத் தனதாக்கிக் கொள்கின்றதோ அதே போன்று இந்நதி தீவினையாளனது பாவங்களைத் தன்னளவில் ஏற்றுக் கொள்கின்றது'' (34-13), என்ற கருத்துச் சிந்தனைக்குரியது.

இலிங்க புராணத்தில் (82 . 88) இடம்பெறும் மற்றொரு கருத்தும் கவனித்தற்குரியது. ''இப்பிரபஞ்சத்தின் தாயாகிய கங்கை உருத்திரனின் உலகில் நிலைபேறு கொள்பவள்; சிவனது அன்புக்குப் பாத்திரமானவள்; எனது பாவங்களை நீக்குவாளாக'' எனவரும் அடிகள் கங்கை நதியின் புனிதத்துவத்தையும் அடியவர்களது பாவங்களை நீக்கும் ஆற்றலையும் எடுத்துக் காட்டுகின்றன. அயோத்தியில் இராமபிரானது பட்டாபிஷேகத்தின் போது பொற்குடங்களில் கங்கையின் புனித நீர் கொண்டுவரப்பட்டதை இராமாயணம் குறிப்பிடுகின்றது (2. 14-15). இறைவனுக்கு நிகழும் கும்பாபிஷேகத்தைப் போன்றே அரசர்களுக்கு நிகழும் பட்டாபிஷேகத்தில் கங்கையின் புனித நீர் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ''தேவர்களுக்கு அமிர்தம் எவ்வாறோ அதுபோன்று மனிதர்களுக்குக் கங்கையின் புனித நீர் ஆகின்றது'' என மகாபாரதம் கூறும் (13 . 26). கங்கையின் சகோதரியாக யமுனை நதியும் சிறப்பிக்கப்படுகின்றாள். இந்த நதிகளும் இமயமலைப் பிரதேசத்திலிருந்து ஊற்றெடுக்கின்றன. கங்காநதி இவ்வுலகில் வாழ்பவர்களுக்கும் இறந்தோருக்கும் நல்லருள் பாலிக்கின்றாள். இவள் சிவனது நடராஜத் தாண்டவத்தின் போது சிவனது அசைவினை உணர்பவளாவள்.

இந்து சமய மரபில் தொன்மையான காலத்திலிருந்து நீராடுதல் ஒரு முக்கிய கடமையாகச் சமய வாழ்க்கையில் இருந்து வருகின்றது. இருக்கோயிற் கிரியைகளில் பங்கு கொள்ளும் முன்பும் மற்றும் இல்லறக் கிரியைகளில் ஈடுபடுமுன்னரும் நீராடி, புறத்தூய்மையுடன் விளங்குதல் அவசியமாகின்றது. இவ்வகையில் நீர் சமயக்கிரியைகளில் ஈடுபடும் ஒருவனைப் புனிதப்படுத்தும் சாதனமாக உள்ளது. தல யாத்திரையின் போது தீர்த்தமாடுதல் புனிதக் கடமையாகப் போற்றப்படுகின்றது. அத்துடன் இத்தகைய சமய ஒழுக்கம் ஒருவனை முத்தியின்பத்திற்கு இட்டுச் செல்வதாகவும் உள்ளது. தீர்த்தங்களில் நீராடுதல் இந்துக்களுக்கு ஒரு புண்ணிய செயலாக விளங்குவதோடு இச்சமய ஒழுக்கம் இந்தியாவின் புகழையும் சமய வாழ்வின் மேன்மையையும் உலகெங்கணும் உணரச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் பாய்ந்தோடும் புனித நதிகள் இந்துக்களின் புனிதத்துவத்தை இன்றும் பாதுகாத்து வருவதோடு சமய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் ஆக்கிவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதபத பிராமணத்தில் மனிதனைப் புனிதப்படுத்தும் நீராடலை விளித்துக் கூறப்படும் வாசகங்கள் குறிப்பிடத்தக்கன. ''நான் நீராடும் வேளை என் உடலில் நீ (நீர்) பாய்ந்தோடும் போது தெய்வங்களின் திருவருள் துணையுடன் மற்றவர்களுக்கெதிராக நான் செய்த பாவங்கள் அனைத்தையும் நீக்கிக் கொள்வேனாக'' (4-5-22-23). இவ்வாறு பண்டைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, அதிபுனித நீரைத் தாங்கிச் செல்லும் புண்ணிய நதியாக இந்துக்களால் கங்கை போற்றப்படுகிறது. மக்களின் வளமான வாழ்க்கைக்கும் இக்கங்கையே பெரிதும் துணை செய்கின்றது. ரிஷிகளுக்கும் பிதிரர்களுக்கும் தர்ப்பணம் செய்யும் போது நீரே முக்கியத்துவம் பெறுகின்றது. எள்ளுடன் கூடிய நீர் பிதிரர்களைத் திருப்திப்படுத்தும்.

சிந்து வெளி நாகரிக காலச் சமய வாழ்வில் நீரின் புனிதத்துவத்தை மக்கள் உணர்ந்திருந்தமை அவர்கள் குளிப்பதற்கான இடங்களை ஏற்படுத்தியிருந்ததிலிருந்து எமக்குப் புலனாகின்றது.

ஆலயங்களில் நிகழும் கிரியைகளில் பிரதிஷ்டை என்று அழைக்கப்படும் கும்பாபிஷேகக் கிரியை நீரோடு நெருங்கிய தொடர்புடையது. கும்பாபிஷேகம் என வழங்கும் பெயர் நீரின் சிறப்பினையே குறித்து நிற்கின்றது. இதனைக் குடமுழுக்கு, திருமஞ்சனப் பெருவிழா எனவும் அழைப்பர். பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய பூமியிலிருந்து பெறப்பட்ட கல் அல்லது உலோகம் ஆகியவற்றினால் சிற்பமரபுக்கேற்ப கலையெழிலுடன் உருவாக்கப்பட்ட திருவுருவத்தில் இறைவனை சாந்நித்தியம் கொள்ளச் செய்யும் பெருஞ்சாந்தியே பிரதிஷ்டையாகும். திருவுருவத்தில் தெய்வத்தை என்றென்றும் நிலைபெற்று விளங்க வேண்டும் என வேண்டி, யாகசாலையில் அக்கினி மூலம் ஆகுதிகள் வழங்கிப் பூசிக்கப்பட்ட தெய்வாம்சம் கொண்ட புனித நீரால் திருவுருவத்தை நீராட்டுதல் இக்கிரியையின் முக்கிய நோக்கமாகும். வழிபாட்டிற்குரிய தெய்வமானது குறித்த திருவுருவத்தில் எழுந்தருளும் வரை யாகசாலையில் அத்தெய்வம் திருக்குடத்தில் உள்ள புனித நீரில் பூசிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அட்ட மூர்த்தி அம்சத்தில் இறைவன் நீரின் அம்சமாகவுள்ளான். தீர்த்தச் சிறப்பு மிக்க நதிகளில் இருந்தும் பெறப்பட்ட புனிதநீர் இக்கும்பத்தில் சேர்க்கப்படுதல் சிறப்பம்சமாகும். மற்றும் மூலிகைகள் வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றுடன் கூடியதாக இக்குடத்தில் உள்ள புனிதநீர் விளங்கும். யாகசாலையில் இக்கும்பம் பிரதான வேதிகையில் ஸ்தாபிக்கப்பட்டு, அதன்முன் விளங்கும் ஓமகுண்டங்களில் உரிய ஆகுதிகளை மந்திரங்களை உச்சரித்து வழங்குதல் குறிப்பிடத்தக்கதாகும். கும்பவடிவில் விளங்கும் இறைவனுக்குப் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய அக்கினி மூலம் வழிபாடு நிகழும், இதனைத் தொடர்ந்து சகல உபசாரங்களுடன் கூடிய விசேட பூசைகள், வேத பாராயணம், திருமுறை பாராயணம், மங்கள வாத்தியங்களுடன் கூடிய நாதாஞ்சலி ஆகியவை இடம் பெறுவன. புனிதநீருடன் கூடிய திருக்குடத்தை மங்கள வாத்தியங்கள் சகிதம் வீதி வலமாக எழுந்தருளச் செய்து திருக்கோயிலில் உள்ள விமானம், கோபுரம், பரிவாரக் கோயில்கள் மற்றும் மூர்த்திகள் ஆகியவற்றுக்குப் புனித நீரால் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாறு திருக்கோயில் வழிபாடு புனித நீருடன் தொடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இடம்பெறும் நித்திய வழிபாட்டிலும் நீருக்குத் முக்கியதுவம் உண்டு. இறைவனுக்கு நிகழும் பகாபிஷேகம், மண்டலாபிஷேகம் போன்றவற்றிலும் நீரே முதன்மை பெறுகின்றது. நைமித்திகக் கிரியைகளாகிய ஸ்நபனாபிஷேகம், சங்காபிஷேகம் போன்றவற்றிலும் நீர் சிறப்புப் பெறுகின்றது. அபிஷேகம் என்ற சொல் நீரினால் இறைவனது திருவுருவத்தை நன்றாக, நனைத்தல் என்ற பொருளைத் தரும் 'புனித நீராட்டுதல்' என இதற்குப் பொருள் கொள்ளலாம். இறைவனுக்கு வழங்கப்படுகின்ற பல்வேறு உபசாரங்களில்

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. சிவன் அபிஷேகப்பிரியன் ஆவான். சிதம்பரம் நடராசப் பெருமானுக்கு ஒரு வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. மார்கழி மாதத்தில் ஆர்த்திராதரிசனத்தின் போது நிகழும் அபிஷேகம் ஆனிமாதம் உத்தர நட்சத்திரத்திலன்று நடக்கும் அபிஷேகம் நடராசருக்கு விசேடமானவை. இறைவனுக்குப் பக்திபூர்வமாக நிகழ்த்தப்படும் அபிஷேகம் வழிபடுவோனது உள்ளத்தில் மனநிறைவைத் தருவதாகும். பக்தியுணர்வுடன் இறைவனை வழிபட இந்நிகழ்ச்சி முன்னோடியாக அமைகின்றது. நாளாந்தமும் சிறப்பாகவும் இறைவனுக்கு நிகழும் அபிஷேகத்தினால் தெய்வ சாந்நித்தியமும் புனிதத்துவமும் இறைவனிடத்தே மிகும். சம்ஹார உற்சவங்கள், மகோற்சவங்கள் நடந்து முடித்தபின்னர், இறைவனுக்கு நிகழும் பிராயச்சித்த அபிஷேகம் குறைகளை நீக்கி மீண்டும் தெய்விகப் பொலிவை ஏற்படுத்தும். மகோற்சவத்தின் இறுதி நாளன்று நிகழும் தீர்த்தோற்சவம் நீரின் புனிதத்துவத்தை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. புனித வாரியில் இறைவன் தீர்த்தமாடும் கோலம் எமது உள்ளத்தைப் புனிதப்படுத்தி, திருவருளை நல்குவதாகும். தீர்த்தோற்சவம் இறைவனது அருளைக் குறிப்பதாகும். சிவபெருமானுக்குத் 'தீர்த்தன்' என்ற திருநாமம் வழங்குவதை மணிவாசகரின் வாக்கின் மூலம் உணரலாம். 'பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' எனப்பாடுகின்றார். ஆலயங்களில் இறைவனது நித்திய அபிஷேகத்திற்கென உரிய நீரினைப் பெறுவதற்குப் புனிதமான கிணறு அமைவது குறிப்பிடத்தக்கது. தீர்த்தமாடுவதற்குத் தீர்த்தக்கேணி அமைக்கும் மரபும் உண்டு.

## நாயன்மார்கட்டுக் கல்வெட்டு

"கலி 3625– ல் சிங்கையாரியனால் (விநாயகப்) பெருமானுக்குத் தீர்த்தங் கொடுக்க இத்திருக்குளம் வெட்டப்பட்டது" என்று (கல்வெட்டில்) பொறிக்கப்பட்டுள்ளது.

சதாசிவக்குருக்கள், சிவஸ்ரீ செ., நாயன்மார்கட்டு அரசடி .விநாயகர் கோயில் இரதோற்சவமலர், 1990. (ப. இல்லை)

□

கி. பி. 9 ஆம் நூற்றாண்டுக்குரிய (கலி 3925) சிங்கையாரியனின் நாயன்மார்கட்டு அரச சேகரப்பிள்ளையார் ஆலயக் கல்வெட்டுச் செய்தி ...........○

நடராசன், மயிலங்கூடலூரர். பி., 'கைலாயமாலைக்குப் புதிய ஒளி' கைலாயமாலை, சுழிபுரம் வள்ளியம்மை முத்துவேலு நினைவு வெளியீடு, யாழ்ப்பாணம். 1983. ப. XIII

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

யாழ்ப்பாணப் பேரரசின் தலைநகராகிய நல்லூரின் திசைத் திருக்கோயில்களுள் ஒன்றாகக் கிழக்குத் திசையில் சிங்கையாரிய மன்னன் ஒருவனால் அமைக்கப்பட்ட நாயன்மார்கட்டு வெயிலுந்த விநாயகர் ஆலயத்தின் குடமுழுக்கு விழாவைமுன்னிட்டு இக்குடமுழுக்கு விழாச் சிறப்பு மலர் வெளியாகின்றது.

பொருளாதாரத் தடைக்குட்பட்ட பொருள்களின் பட்டியலில் முக்கிய இடம் பெற்றிருப்பது அச்சிடும்தாள். இந்த நிலையிலும் இம்மலரை வெளியிடக் கொடைமடம் பட்ட அன்பர்களே மூல காரணமாவார். நடுவூரில் பழுத்த நல்ல கற்பக தருவாக விளங்கும் அன்பர் திரு. இ. சரவணமுத்து அவர்கள், மலர் வெளியீட்டுப் பணிக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

திரு நி. லோகநாதன், திரு. க. குணரத்தினம் ஆகியோர் மலர் வெளியீட்டுக்கு நிதி வழங்கித் துணைநின்றனர்.

பேரறிவும் பதிப்புத்துறை ஆற்றலும் மிக்க வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்கள் மலரைத் திட்டமிட்டுக் கட்டுரைகளையும் கவிதைகளையும் பெற்று அச்சிற் பதிப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். செயலாற்றலும் தொண்டுள்ளமும் கொண்ட இளைஞர்களாகிய அறிவியல் ஆசானும் நாடக நெறியாளருமான திரு இ. அரசகுலசூரியனும், சமூக மேம்பாட்டுப் பணியாளர் திரு. நி. தயாநந்தனும் மலர்க்குழு உறுப்பினராகி அயராது பணியாற்றினர். மயிலங்கூடலூர் பி. நடராசன் மலர் வெளியீட்டிற்குத் துணைநின்றார்

சமயப் பணியில் தலைநிற்கும் சாதனையாளர்களான நல்லை பரமாசாரிய சுவாமிகள், செல்வி துர்க்காதுரந்தரி அம்மையாரவர்கள், மகா கும்பாபிஷேக முதன்மைக்குரு சிவத்திரு கந்த. சிவபாதசுந்தரக் குருக்கள், வெயிலுகந்த விநாயகரின் திருவடி தீண்டும் சிவஸ்ரீ சோ. பாலசுந்தரக் குருக்கள், தொண்டர்சீர் பரவு திரு கா. ரெகுநாதன், பண்ணைச மன்றத்தினர் ஆகியோர் ஆசியுரை தந்தனர்.

வடமொழி வல்ல தமிழறிஞர் பண்டிதர் த. சுப்பிரமணியம் நாயன்மார் கட்டின் வளர்ந்துவரும் இளம் புலவர்களாகிய திருவாளர்கள் ப. மகேந்திரதாசன் இரா. குகதாசன் ஆகியோர் பக்திநலம் கமழும் கவிதைகளை வழங்கினர்.

வடமொழிப் பேராசிரியரும் வரலாற்றறிஞருமான திரு வி. சிவசாமி, யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தொல்லியல் ஆய்வுத்துறையின் நம்பிக்கை நட்சத்திரங்களுள் ஒன்றாகச் சுடர்விடும் வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு செ. கிருஷ்ணராசா இந்து நாகரிகத்துறைத் தலைவராக விளங்கும் அறிஞர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், பல்துறை அறிஞராக விளங்கும் கோயிற் கிரியா வித்தகர் பிரம்மஸ்ரீ கந்த. சாம்பசிவக்குருக்கள், வளர்ந்துவரும் இளங்கோயிற் கிரியா வித்தகர் சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக்குருக்கள் ஆகியோர் மலரை அணி செய்யும் அரிய கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

நல்லூர், திருவள்ளுவர் அச்சக முதல்வர் திரு சொ. விமலன் அவர்களும் அச்சகப் பணியாளரும் குறுகிய காலத்தில் மலரைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கினர். மலர் அட்டையிலும் உள்ளும் இடம்பெறும் அழகிய புகைப்படங்களை வழங்கியவர் திரு. சி. கணேசராஜா (கோல்ட்டன்லக் இருபாலை) படஅச்சுக்களை மிகக் குறுகிய காலத்தில் கொழும்பு ஸ்ருடியோ நிறுவனத்தினர் செய்து வழங்கினர் இவர்கள் அனைவருக்கும் பல்வேறு வகைகளில் உதவிய பிறருக்கும் விநாயகப்பெருமானின் அருளாசியை வேண்டி நன்றி கூறுகிறோம்.

நாயன்மார்கட்டு.
1993-07-14.

-தேவஸ்தானத்தார்

250263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநெறி தழைத்திடச்
## செய்தநாற் குரவர்கள்



பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர்
வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத
வூரர்திருத் தாள்போற்றி.

திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org